Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 102 | திங்கட்கிழமை | மாசி 24 ஆம் நாள் 08 மார்ச் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## தடுப்பூசி விவகாரம்; இந்தியா கைவிரிப்பு

கொழும்பு, மார்ச் 8
இலங்கை கோரிய ஒரு மில்லியன் கொவிட் தடுப்பூசிகளை ஏப்ரல் பிற்பகுதி வரை வழங்க முடியாது என்று இந்தியா 19

# குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையை நிறுத்தவும்!

## ஐ.நா.விடம் கோரிக்கை விடுத்தனர் இந்திய உயர் நீதிமன்ற நீதிபதிகள்



நீதிபதி K.P சிவசுப்பிரமணியம் · நீதிபதி A.K ராஜன் · நீதிபதி அரிபரந்தாமன் · நீதிபதி அக்பர் அலி · நீதிபதி C.T செல்வம்

கொழும்பு, மார்ச் 8
இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு ஐ.நா. மனித உரிமைகள் சபையும், அதன் அங்கத்துவ நாடுகளும் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதிகள் ஐவர் வலியுறுத்தியுள்ளனர். 19



## கூட்டமைப்பிலிருந்து பங்காளிக் கட்சிகள் வெளியேற வேண்டும்

*கஜேந்திரகுமார் கோரிக்கை*

யாழ்ப்பாணம், மார்ச் 8
பங்காளிக் கட்சிகளுக்குத் தெரியாமல் இரண்டாவது அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதால், பங்காளிக் கட்சிகள் கூட்ட 19

## கோத்தாபய அரசின் பொறுமையை சோதிக்கக்கூடாதாம் தமிழ் மக்கள்

*தேவையற்ற போராட்டங்களை நிறுத்தவேண்டும் என்கிறார் கெஹலிய*



கொழும்பு, மார்ச் 8
'ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு, தமிழ் மக்களுக்கு எதிரான அரசு அல்ல. இந்த நிலையில், அரசுக்கு எதிராகவும், அரசின் பொறுமையைச் சோதிக்கும் 19

## ஐ.நா.வின் வரைவால் புலிகளுக்கு புத்துயிர்

இலங்கை மீதான பிரேரணையை வெளிநாடுகள் தோற்கடிக்க வேண்டும் என்கிறது கொழும்பு

கொழும்பு, மார்ச் 8
இலங்கையில் கூண்டோடு அழிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் புத்துயிர் ஊட்டும் வகையில் ஐ.நா.வில் சமர்ப்பிக்கப்பட் 19

## கடலில் மூழ்கி இளைஞன் பலி

வவுனியா, மார்ச் 8
முல்லைத்தீவு - நாயாற்றுப் பகுதியில் கடலில் குளிக்கச் சென்ற இளைஞரொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார். வவுனியா புதுக்குளம் பகுதியில் வசிக்கும் இளைஞர்கள் 19

## படையினரின் போர்க் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை பூர்த்திசெய்யவில்லை

**'பொ-பொ' மக்கள் பேரெழுச்சி இயக்கம் சுட்டிக்காட்டு**

யாழ்ப்பாணம், மார்ச் 8
இலங்கைக்கு எதிராக வரையப்பட்டுள்ள சர்வதேசத் தீர்மானமானது, தமிழர்களைக் கொத்துக் கொத்தாகக் கொன்றமை மற்றும் தமிழகப் பெண்களை வன்புணர்ந்தமை அடங்கலான இலங்கை பாதுகாப்புப் படையினரால் புரியப்பட்ட கொடூரமான குற்றங்களின் பொறுட் 19

## முன்னணியின் பின்னணியில் இருப்பது ராஜபக்ச அரசே!!

முதல்வர் மணிவண்ணன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 8
பல லட்சம் ரூபா செலவு செய்து ராஜபக்ச தரப்பின் பின்னணியில் யாழ். மாநகர சபையை கலைப்பதற்கு சதி நடக்கிறது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த ராஜபக்சக்களின் விசுவாசிகளூடாக அந்தச் செயற்பாடு நடைபெறுகிறது. இவ்வாறு 17

## வடக்கில் 6 பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், மார்ச் 8
யாழ்ப்பாணத்தில் மேலும் 6 பேருக்கு கோரோனாத் தொற்றுள்ளமை நேற்று ஞாயிற்றுக்கிழமை உறுதிப்படுத்தப்பட்டது. அவர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தாதிய உத்தியோகத்தர் என்று வட 16

## ஈஸ்டர் தாக்குதலில் 'பம்மியவர்கள்' இன்று கறுப்புக்கொடி ஏற்றுகின்றனர்

*ஜனாதிபதி கோத்தாபய சீற்றம்*



கொழும்பு, மார்ச் 8
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தேசியப் பிரச்சினை. அதனை ஒரு அரசியல் கருப்பொருளாக எடுத்துக் கொள்ளக்கூடாது. இந்த அனர்த்தம் தொடர்பில் சரியான முறையில் செயற்படுவது தாக்குதலால் 17

## இரணைதீவில் ஜனாஸா அடக்கம் தேவாலயங்களில் கவனவீர்ப்புகள்

யாழ்ப்பாணம், மார்ச் 8
'கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் ஜனாஸாக்களை இரணைதீவில் அடக்கம் செய்யும் தீர்மானத்தை அரசு கைவிட வேண்டும்' என்று வலியுறுத்தி வடக்கு மாகாணத்தில் உள்ள 16




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மாமாங்கேஸ்வரம் போராட்டத்தை இன்றுடன் முடிவுறுத்த வேண்டுமாம்!

*எச்சரிக்கை விடுத்துச் சென்ற பொலிஸார்*

**மட்டக்களப்பு, மார்ச் 8**

**மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் கோவில் முன்றலில் முன்னெடுக்கப்பட்டுவரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை, நாளை (இன்று) காலைக்குள் முடிவுறுத்த வேண்டும் என்று மட்டக்களப்பு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துச் சென்றுள்ளனர்.**

இலங்கையில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அநீதிகளுக்கு சர்வதேச ரீதியில் நீதிவேண்டி வடக்கு கிழக்கில் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்தநிலையில், அன்னை பூபதி உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் கோவில் முன்றலில் கடந்த புதன்கிழமை ஆரம்பமான குறித்த போராட்டம், ஆறாவது நாளாக இன்று திங்கட்கிழமை தொடரும் நிலையில், இந்தப் போராட்டத்தை முடிவுறுத்துமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

போராட்டம் நடைபெறும் பகுதிக்கு நேற்று மாலை வந்த மட்டக்களப்பு பொலிஸார், சிலரின் பெயர்களை வாசித்து அவர்கள் போராட்டத்தில் பங்குபற்ற தடையுத்தரவு உள்ளது என்று தெரிவித்தனர். எனினும், பொலிஸார் குறிப்பிட்ட பெயரில் அங்கு யாரும் இல்லை என்று அங்குள்ளவர்கள் தெரிவித்தனர். அதனையடுத்து, "இந்தப் பகுதியில் போராட்டம் நடத்தமுடியாது. இங்கிருந்து நாளை காலை 9 மணிக்கு முன்னர் வெளியேறிச் செல்ல வேண்டும்." என்று பொலிஸார் எச்சரித்தனர் என்று போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

"சுகாதார நடைமுறைகளைப் பேணி மிகவும் அமைதியான முறையில் போராட்டம் மேற்கொண்டுவரும் மக்களை அச்சுறுத்தும் வகையில் பொலிஸார் நடந்துகொண்டனர். குறித்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பெண்களை ஒரு பொலிஸ் அலுவலர் அலைபேசியில் ஒளிப்படம் எடுத்தார். பெண்களின் அனுமதியின்றி குறித்த பொலிஸ் அலுவலர் அவ்வாறு செயற்பட்டார்." என்று அருட்தந்தை க.ஜெகதாஸ் தெரிவித்தார். (த-150)

# பெண்களின் உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும்

*முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வலியுறுத்து*

யாழ்ப்பாணம், மார்ச் 8



வடக்கு - கிழக்கில் இன்று ஏராளமான பெண்தலைமைக் குடும்பங்கள் உள்ளன. அவற்றின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட நாம் அனைவரும் பாடுபட வேண்டும் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான ஈ.சரவணபவன்.

சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு அவரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இன்று பெண்கள் தினம் உலகமெங்கும் கொண்டாடப்படுகின்றது. எமது நாட்டிலும் குறிப்பாக தமிழர் தாயகப் பகுதிகளிலும் இந்தத் தினத்தைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் பரவலாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த நேரத்தில் நாம் பெண் தலைமைக் குடும்பங்கள் தொடர்பில் அதிகம் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். எமக்காகக் களமாடிய தலைவர்களை இழந்த குடும்பங்கள் இன்று வறுமையின் பிடியில் சிக்கியுள்ளன. எமக்காகக் களமாடிய எத்தனையோ பெண் போராளிகளின் வாழ்க்கைத்தரம் இன்று மேம்படுத்தப்படாத நிலையில் உள்ளது. இவை தொடர்பில் நாம் கூடுதலான கரிசனை உள்ளவர்களாகச் செயற்பட வேண்டும். அவர்களின் தேவைகளையும், அவர்களின் கோரிக்கையையும் அங்கீகரிக்க வேண்டும். முன்னேற்ற வேண்டும். பெண்களின் உரிமைகளையும் உணர்வுகளையும் மதித்து அவர்களையும் சம பிரஜைகளாக ஏற்று நடக்க வேண்டும். அத்தோடு பெண்கள் தம் உரிமைகளை நிலைநாட்ட அரசியலையும் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்த முன்வர வேண்டும் - என்றுள்ளது. (ம)

*சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்க*

# யாழ். நகரில் இன்று தீப்பந்தப் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 8

இலங்கை அரசால் தமிழ் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி வேண்டி சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மாபெரும் தீப்பந்த போராட்டம் யாழ்ப்பாணத்தில் இன்று திங்கட்கிழமை நடத்தப்படவுள்ளது.

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி வடக்கு கிழக்கில் உள்ள பொது அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் இன்று முற்பகல் 11 மணிக்கு நல்லூர் பின் வீதியில் உள்ள போராட்டக் களத்திலிருந்து ஆரம்பமாகவுள்ள குறித்த பேரணி, நாவலர் வீதியில் உள்ள ஐ.நா. அலுவலகம் வரை செல்ல வுள்ளது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தக்கோரி பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொது அமைப்புகள் ஆகியவை இணைந்து வடக்குகிழக்கில் சுழற்சிமுறை உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளன. அத்துடன் லண்டனில் உள்ள அம்பிகை செல்வகுமார் மேற்குறித்த கோரிக்கை உட்பட 4 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து சாகும் வரையான உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளார். இவை மட்டுமன்றி, வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் 4 வருடங்கள் கடந்தும் நீதி வேண்டி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதேபோன்று தமிழரின் உரிமைகளுக்காக தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் நீதிக்காக போராடும் இனத்தின் கோரிக்கைகளை ஐ.நா. கவனத்தில் எடுத்து செயலபடவேண்டும் என வலியுறுத்தி இன்று போராட்டம் நடத்தப்படவுள்ளது. (த-இ)

# மனிதாபிமான பணிக்குரிய கணினிகள் மாயமாகின

*மீள ஒப்படைக்குமாறு கோரிக்கை*

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ்ப்பாணம் ஏ9 வீதி அரியாலையில் இயங்கும், சிறுவர் அபிவிருத்தி நிலைய அலுவலகத்திலிருந்து, கணினிகள் காணாமல் போயுள்ளன என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

போரின் பின்னர் துயருடன் வாழ்கின்ற எமது மக்களின் மனிதாபிமானப் பணிகளுக்குத் தேவையான தகவல்களை உள்ளடக்கிய கணினிகளே காணாமல் போயுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. மேற்படி கணினிகள் எவ்வகையிலாவது எவராவது கைகளில் கிடைக்குமாயின், 0777238686 என்ற இலக்கத்துக்கு அழைத்து ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (த-319)

# புதிய பஸ் நிலையத்துக்கு வர இ.போ.ச.வினர் முன்வரவில்லை

*பல தரப்பினருடன் பேசுகின்றனர் என்கிறார் முதல்வர்*

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ்ப்பாணத்திலிருந்து தூர இடங்களுக்கு சேவைகளில் ஈடுபடும் பஸ்கள் தரித்துநின்று, பயணிகளை ஏற்றிச் செல்லும் வகையில் அமைக்கப்பட்ட புதிய பஸ் நிலையத்தை பயன்படுத்த இ.போ.ச.வினர் இன்னும் முன்வரவில்லை. அவர்கள் பல தரப்பினருடன் இன்னும் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் புதிய பஸ் நிலையத்திலிருந்து மக்களுக்கு சேவை வழங்க விரைவில் முன்வரவேண்டும் என்று யாழ்.மாநகர் முதல்வர் வி.மணிவண்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வேலைத்திட்டங்கள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு யாழ்.மாநகர சபையில் நேற்று நடைபெற்றது.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 27ஆம் திகதி புதிய பஸ் தரிப்பிடம் திறந்துவைக்கப்பட்டபோதும், இன்றுவரை அது இயங்காமலுள்ளது. தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் குறித்த இடத்தில் இயங்குவதற்கு சம்மதம் தெரிவித்திருக்கின்றபோதும், இலங்கை போக்குவரத்துச் சபையினர் இதுவரை சம்மதிக்கவில்லை.

அரச பஸ் சேவைகள் பொதுமக்களுக்கு நன்மை அளிப்பனவாகவே இயங்க வேண்டும். இந்தச் சேவையை வழங்குகின்றவர்கள் இலாபத்தைக் கருத்தில்கொண்டு செயற்படுவது வேதனைக்கும் வருத்தத்துக்குமுரியது. நாங்கள் இலங்கை போக்குவரத்துச் சபையினரை கடந்த ஒரு மாத காலமாக பல்வேறு தடவைகள் ஆளுநர் தலைமையில் பேச்சுகளுக்கு அழைத்தும் இலங்கை போக்குவரத்துச் சபையினர், இதற்கு தயாராக இருக்கவில்லை.

மாநகர சபையுடன் பேசுவதற்குக்கூட அவர்கள் தயாராக இல்லை. ஆகக்கூடிய கோரிக்கை என்ன என்று கேட்டதற்குக்கூட அவர்கள் பதிலளிக்கவில்லை. யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட யாழ்.போதனா மருத்துவமனை வீதியை தூர பிரதேச பஸ்கள் பயன்படுத்துவதற்குத் தடை செய்யவேண்டும் என்ற தீர்மானம் மாநகர சபையில் நிறைவேற்றப்பட்டது.

இதன் பின்னர் ஆளுநர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில்கூட இலங்கை போக்குவரத்துச் சபையினர் எவருமே கலந்துகொள்ளவில்லை. நெடுந்தூர பஸ் தரிப்பிடத்தில் சேவைகளைத் தொடர்வது தொடர்பாக இலங்கை போக்குவரத்துச் சபையினர் பல்வேறு தரப்பினருடன் பேச்சு நடத்தியிருந்தனர். ஆனால் இதுவரை அவர்கள் தமது முடிவை எமக்கு அறிவிக்கவில்லை. இது தொடர்பில் அவர்கள் சிறந்த முடிவை வெளியிடுவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம் - என்றார். (த-319-26)

# அப்துல் கலாமின் சகோதரன் காலமானார்

டில்லி, மார்ச் 8



இந்திய முன்னாள் குடியரசு தலைவர் கலாநிதி அப்துல் கலாமின் அண்ணன் முத்து மீரான் லெப்பை மரைக்காயர், தனது 104 வயதில் காலமானார்.

ஆவுல் பக்கீர் ஜெய்னுல்லாபுதின் மகனாக 1917ஆம் ஆண்டு நவம்பர் 5ஆம் திகதி இவர் பிறந்தது. ராமேஸ்வரம் முஸ்லிம் தெருவில் உள்ள அவரது வீட்டில் வசித்துவந்தார். வயது மூப்பு காரணமாக வீட்டிலேயே காலமானார். (த-இ)

கமக்கார அமைப்புக்கான

# நிர்வாகத் தெரிவு தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்துக!

விவசாயிகள் கோரிக்கை


**முல்லைத்தீவு, மார்ச் 8**

**முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு துணுக்காய் பிரதேச கமநல சேவைகள் திணைக்களத்துக்குட்பட்ட கமக்கார அமைப்புகளுக்கான நிர் வாகத் தெரிவு கடந்த இரண்டு வருடங்களாக நடைபெறவில்லையென விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.**

வருடத்துக்கு ஒரு தடவை பிரதேச கம நல சேவைகள் திணைக்கள அதிகாரி களின் ஒழுங்குபடுத்தலில் கமக்கார அமைப்புக்களின் நிர்வாகத் தெரிவுகள் இடம்பெற்று வந்தன.

இந்த நிலையில் கடந்த 2019 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இறுதியாக நடைபெற்ற நிர்வாகத் தெரிவைத் தொடர்ந்து, இதுவரை புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெறவில்லை.

இது தொடர்பில், பிரதேச கமநல சேவைகள் திணைக்கள உத்தியோ கத்தர்கள் விசேட கவனம் செலுத்த வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-12)



நீதியில்லையேல்

# நாடு முழுவதும் கறுப்புக் கொடி

*அரசுக்கு பேராயர் எச்சரிக்கை*

கொழும்பு, மார்ச் 8

ஈஸ்டர் தினக் குண்டுத் தாக்குதலில் பாதிக்கப் பட்டவர்களுக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதிக்குள் வெளிப்படையான விசார ணையின் மூலம் நீதி கிடைக்கவில்லை எனில், அவர்கள் கறுப்பு நிற அங்கியயை மட்டும் அணிய மாட்டார்கள், வலுவான எதிர்ப்பை வெளிப்படுத்த, ஆண்டு முழுவதும் க று ப்புக் கொடியை ஏற்றுவதற்கு நாடு முழுவதும் உள்ள மக்களை அழைக்கவுள்ளோம் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது; தாக்குதல் குழுவின் நிதி ஆதாரங்கள் மற்றும் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரி போன்ற விவரங்கள் அறிக்கையில் குறிப்பிடப்பட வில்லை .

அரசு மேலும் விசாரணைகளை வீரியத்துடன் மேற்கொள்ளும் என்று தேவாலயம் எதிர்பார்க் கிறது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் உண்மையான சூத்திரதாரிகளின் பெயர்களை வெளியிடவேண்டும். தாக்குதலில் பாதிக்கப் பட்டவர்களுக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதிக்குள் வெளிப்படையான விசார ணையின் மூலம் நீதி கிடைக்கவில்லை எனில், அவர்கள் க று ப்பு நிற அங்கியை மட் டும் அணிய மாட்டார்கள். வலுவான எதிர்ப்பை வெளிப்படுத்த ஆண்டு முழுவதும் கறுப்புக் கொடியை ஏற்றுவதற்கு, நாடு முழுவதும் உள்ள மக்களை அழைக்கவுள்ளோம். தாக் குதல்களுக்குப் பின்னால் உள்ள சூத்திரதாரிகள், அவர்களுக்கு உதவி செய்த வர்கள் மற்றும் ஊக்குவித்தவர்கள், தாக்கு தல் நடத்தியவர்களுக்கு நிதியளித்தவர்கள் மற்றும் பலவீனப்படுத்தவும் நாசவேலை செய்யவும் தலையிட்டவர்கள் உள்ளிட்ட அனைத்து தகவல்களையும் அரசு வெளி யிட வேண்டும் - என்றார். (ப)

## துப்பாக்கி, வாளுடன் ஒருவர் கைது

கொழும்பு, மார்ச் 8

கொழும்பு ரத்கம பகுதியில் சிறப்பு விசேட அதிரடிப்படையினர் மேற் கொண்ட சோதனையில், உள் நாட்டு துப்பாக்கி மற்றும் வாள் என்பன நேற்றுமுன்தினம் மீட்கப் பட்டுள்ளன. அவற்றை வைத்தி ருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தார்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த, 32 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மேல திக விசாரணைகளுக்காக ரத்கம பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளார் என்று தெரிவிக்கப்பட் டது. (த-இ)

## வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக் குள், அமைந்து நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியை ஏற்றிக்கொள்ள முடியும்.

இன்று திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை மூத்த விநாயகர் சனசமூக நிலையத் திலும், 11 மணி தொடக்கம் மதியம் 1.30 மணி வரை ஆசிவாதப்பர் வீதி சுகாதார கல்வி மையத்திலும், பிற்ப கல் 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நாயன்மார் வீதி சுகா தார கல்வி மையம் ஆகிய இடங்க ளில் நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப் படவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை யூக்கோவா பாலர் பாடசாலையி லும், 11 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை வெயில்கந்த பிள்ளையார் கோவில் செம்மணி வீதியிலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை கடுக்காய் வீதியிலும் தடுப்பூசிகள் ஏற்றப்படும் என்று மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள் ளார். (ஐ)

ஐ.நா.வுக்கு

## கூட்டமைப்பின் பங்காளிகளுக்கு தெரியாமலே ஆதரவுக் கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 8

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப் பட்டுள்ள வரைவை வரவேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கையெழுத்துடன் வெளியாகியுள்ள கடிதம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி களான ரெலோ மற்றும் புளொட் ஆகிய இரண்டு கட்சிகளதும் சம்மதமின்றி வெளியிடப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. ஐ.நா. மனித உரிமை கள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரைவை நிறைவேற்ற உறுப்பு நாடுகளிடம் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு ஆதரவு கோரும் கடிதம் நேற்று முன்தினம் வெளியாகியிருந்தது. தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கையெழுத்துடன் இந்தக் கடிதம் வெளியாகியி ருந்தது. அதன் கீழே பங்காளிக் கட்சித் தலைவர் களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு இருந்தன.

'ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக் கப்பட்டுள்ள தற்போதைய வரைவை ஏற்க முடி யாது. தமிழ் மக்களின் கோரிக்கைகளை அது பிரதிபலிக்கவில்லை' என்று குறிப்பிட்டுள்ள ரெலோ அமைப்பு, இந்தக் கடிதம் தமது ஒப்புத லைப் பெறாது வெளியிடப்பட்டது எனவும் சுட்டிக் காட்டியுள்ளது. இந்த விடயம் தொடர்பில் புளொட்டின் தலைவர் த.சித்தார்த்தனை உதயன் நேற்று மதியம் தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்த 'கடிதத்தை வாசித்த பின் னரே அது தொடர்பில் பதிலளிக்க முடியும்' என்று தெரிவித்தார். (ஒ,5)



# ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதிகோரி கறுப்பு ஞாயிறு கடைப்பிடிப்பு

கொழும்பு, மார்ச் 8

இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்டக் கோரி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் 'கறுப்பு ஞாயிறு' ஆர்ப்பாட்டம் நடத்தப் பட்டது.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத் தன்று இடம்பெற்ற மிகவும் கொடூர மான தற்கொலைக் குண்டுத் தாக்கு தல்களுடன் நேரடியாகத் தொடர்புடை யவர்கள் கண்டறியப்படாமலும், பாதிக் கப்பட்டவர்களுக்கு நீதி நிலைநாட்டப் படாமலும் இருக்கின்ற நிலையில், நேற்று 'கறுப்பு ஞாயிறு' தினப் போராட் டத்துக்கு கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அழைப்பு விடுத்தி ருந்தார்.

அதற்கமைய நேற்று ஞாயிற்றுக் கிழமை வணக்க வழிபாடுகளுக்காக நாடளாவிய ரீதியில் உள்ள கத்தோ லிக்க தேவாலயங்களில் ஒன்றுகூடிய மக்கள், கறுப்பு ஆடைகள் அணிந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்த வகையில் குண்டுத்தாக்கு தலுக்கு இலக்கான கொழும்பு கொச் சிக்கடை தேவாலயத்தில் முன்னெடுக் கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையுடன் இணைந்து பௌத்த மதகுருமாரும் பங்கேற்ற னர்.. 'உயிர்த்த ஞாயிறு தினத் தாக்கு தல் இது கைதேர்ந்த ஒருவரால் திட்டமி டப்பட்ட மனிதப் படுகொலை. இதில் நேரடியாகத் தொடர்புடையவர்களுக் கும் கடமைகளைத் தவறவிட்டவர்க ளுக்கும் சட்டம் நீதி வழங்கட்டும்' என்ற வாசகம் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஒ.22)

# உலக வல்லரசான அமெரிக்காவாலேயே 9/11 தாக்குதலை தடுக்க முடியவில்லை



## மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 8
உலக வல்லரசான அமெரிக்கா வால்கூட ஒசாமா பின்லேடனின் செப்ரெம்பர் 11 தாக்குதலைத் தடுத்துக்கொள்ள முடியாமல் போனது என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
பௌத்த நூலகமொன்றுக்கு நேற்று அடிக்கல் நடும் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
இந்த நிகழ்வில் உரையாற்றிய பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு, தாக்குதல் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டது. இன்று அது பொதுபலசேனாவை இலக்கு வைத்துள்ளது' என்று குற்றஞ்சாட்டினார்.
அதற்கு, தொழில்நுட்ப ரீதியாக வளர்ச்சி கண்ட அமெரிக்க புலனாய்வுத்துறைக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னரே செப்ரெம்பர் 11 தாக்குதல் தொடர்பான தகவல்கள் கிடைத்திருந்தும், அவர்களால் தாக்குதலைத் தடுத்து நிறுத்த முடியாமல் போனது, என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதிலளித்தார்.
தீவிரவாதமும், இஸ்லாமிய அடிப்படைவாதமும் இலங்கை மாத்திரமன்றி முழு உலகமும் முகம் கொடுத்து வரும் பிரச்சினைகள் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். (ஒ-22)

# அரசியலில் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்க வேண்டும்

## மகளிர் நாள் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி கோத்தாபய தெரிவிப்பு



**கொழும்பு, மார்ச் 8**
**இலங்கையில் பொருளாதார சமூக மற்றும் கலாசார வாழ்க்கையின் பல துறைகளில் பெண்கள் அதிக பிரதிநிதித்துவத்தைப் பெற்றுள்ளனர். இது போன்று அரசியல் துறையில் அவர்களது பங்கேற்பு இன்னும் அதிகரிக்கப் பட வேண்டும். என்று ஜனாதிபதி கோத்தாபய தெரிவித் துள்ளார்.**

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது;
ஒரு நாடு பெண்களை நடத்தும் விதம் அதன் உண்மையான வளர்ச்சியின் சமூக குறிகாட்டியாகும். இந்த விடயத்தில் இலங்கை ஏனைய பல நாடுகளுக்கு முன்மாதிரியாக திகழ்கிறது.
பெண் என்பவள் எந்தவொரு சமூகத்திலும், அதன் அடிப்படை அலகாக விளங்கும் குடும்பக் கட்டமைப்பிலும் அடித்தளமாக விளங்குகின்றாள்.
தனது வாழ்நாள் முழுவதும் பல விதமான பாத்திரங்களை வகிக்கும் அவள், பல குடும்ப அலகுகள் இணைந்து உருவாகும் சமூகத்தை பிணைத்து வைத்திருப்பதில் ஒரு வலுவான பங்கை வகிக்கின்றாள்.
எப்போதும் பண அடிப்படையில் மதிப்பிடப்படாத போதும், தேசிய உற்பத்திக்கான அவளது பங்களிப்பு அதிக பெறுமதியுடையது என்பதை உறுதியாகக் கூறமுடியும். எனவேதான் பெண்களின் கண்ணியம், சமத்துவம் மற்றும் மகிழ்ச்சியைப் பாதுகாத்து போசிப்பது ஒரு சமூகப் பொறுப்பாகும். -என்றுள்ளது. (ஐ)

## பெண்களின் உரிமைக்காக ஒவ்வொரு நொடியும் அர்ப்பணிக்கப்பட வேண்டும்

### பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 8
உலகில் பெண்களின் உரிமைகளுக்காக ஒரு தினம் கொண்டாடப்பட்டாலும், ஒவ்வொரு தருணமும் பெண்களின் உரிமைகளுக்காக அர்ப்பணிக்கப்பட வேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
உலக மகளிர் தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது;
பெண் என்பவள் மகளாக, தாரமாக மற்றும் உலகின் உன்னத பதவியான தாயாகவும் அனைத்து நிலையிலும் நிறைந்திருக்கிறாள். எனவே, பெண்களுக்கு சமூகத்தில் உரிய மரியாதை வழங்கப்பட வேண்டும். ஒரு அரசாக பெண்களுக்கு எதிரான வன்முறையையும், பாகுபாட்டையும் நாங்கள் கடுமையாக கண்டிக்கிறோம். அவர்களது உயர்வின் மூலமான சமூக நலனுக்கான வாய்ப்புக்களை நாம் ஒரு நாடு என்ற ரீதியில் அனுபவித்து வருகின்றோம். வரலாற்றில் விகாரமஹா தேவி முதல் நவீன காலத்தில் உலகின் முதலாவது பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் மூலம் இலங்கை பெண்ணின் வீரமும் தலைமைத்துவமும் உலகுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அந்தச் செல்வாக்குக்கு ஏற்ப இந்நாட்டு பெண்கள் இன்று பல்வேறு துறைகளில் தாய்நாட்டில் பல பொறுப்புகளைக் கொண்டிருப்பது பெருமைக்குரிய விடயமாகும் என்றுள்ளது. (ஐ)

## மந்துவில் வடக்கில் கைக்குண்டு மீட்பு

மந்துவில் வடக்குப் பகுதியில் காணி ஒன்றை உழவு இயந்திரத்தால் உழுது கொண்டிருந்த போது, அக் காணியிலிருந்து கைக்குண்டு ஒன்று நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில், காணி உரிமையாளர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்துள்ளார்.
இதையடுத்து விசேட பொலிஸ் பிரிவு நீதிமன்ற அனுமதியைப் பெற்று மீட்புப் பணியை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-159)

## கொரோனாவை விரட்ட சுழிபுரத்தில் வழிபாடு

யாழ்ப்பாணம், மார்ச் 8
உலகெங்கும் வாழ்கின்ற மக்கள் அனைவரும் கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட வேண்டி யாழ்ப்பாணம் - சங்கானை - சுழிபுரம் பறாளய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெறவுள்ளன.
பூசை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் முதன்மை குரு பிரம்மஸ்ரீ மு. பாலகுருசாமிசர்மாவின் அருளாசி உரையும், வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன. (ஐ)

## முரண்பாடுகளைச் சாதகமாக்கி கூட்டணியை உடைக்க முயற்சி

### சீறுகிறார் மொட்டுக் கட்சியின் செயலர் சாகர காரியவசம்

கொழும்பு, மார்ச் 8
கருத்து முரண்பாடுகளை சாதகமாகப் பயன்படுத்திய ஒரு தரப்பினர், பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியை உடைத்து, அரசை பலவீனப்படுத்த முயற்சிக்கிறார்கள் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
பொதுஜன பெரமுன அனைத்து பங்காளிக் கட்சிகளையும் ஒன்றினணத்து சிறிலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியை உருவாக்கியது. ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலில் கூட்டணியாக ஒன்றிணைந்து தேர்தலில் போட்டியிட்டு மக்கள் ஆணையைப் பெற்றுக் கொண்டோம். பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில், நாட்டு மக்கள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசை ஸ்தாபித்துள்ளார்கள். நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமாயின், கூட்டணியில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் கூட்டுப் பொறுப்புடன் செயற்பட வேண்டும். கூட்டணியின் உள்ளக பிரச்சினைகளை பொது இடங்களில் பகிரங்கப்படுத்துவதால் முரண்பாடுகள் மாத்திரமே தோற்றம்பெறும். அமைச்சர் விமல் வீரவன்சவின் செயற்பாடுகளை கடந்த காலங்களில் சுட்டிக்காட்டினோம். இவருக்கும் எமக்கும் இடையில் தனிப்பட்ட முரண்பாடுகள் எவையும் கிடையாது. கூட்டணியில் கூட்டுப் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினோம். பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணிக்குள் எழுந்துள்ள முரண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு தரப்பினர் அரசை பலவீனப்படுத்த முயற்சிக்கிறார்கள் - என்றார். (ப)




## தமிழரசுக் கட்சியின் மகளிர் தின நிகழ்வு

கிளிநொச்சி, மார்ச் 8
சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இலங்கை தமிழரசுக் கட்சியின் மகளிர் தின நிகழ்வு கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் நடைபெற்றது.
தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட தமிழரசுக் கட்சியின் மகளிர் அணித் தலைவி சிறிகாந்தன் கலைவாணி தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில், கட்சியின் கொடியை நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்றது.
அதனைத் தொடர்ந்து அன்னைபூபதிக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு விளக்கேற்றப்பட்டதைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் இடம்பெற்றன. (ச-6)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பேரியக்கமாதல் காலக் கட்டாயம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமர்வில் இலங்கை தொடர்பாக சமர்ப்பிக்கப்படவுள்ள தீர்மானத்தின் வரைவு வெளியாகியுள்ளது. தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை சிதறடித்து, ஏமாற்றத்தைத் தரும் விதத்தில் அந்தத் தீர்மான வரைவில் உள்ள விடயங்கள் இருக்கின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை கடந்த காலங்களில், இலங்கைக்கு வழங்கிய கால அவகாசங்களில் எந்தப் பயனும் இல்லாத நிலையில், மனித உரிமைகள் சபையைத் தாண்டி, சர்வதேச பொறுப்புக் கூறல் பொறிமுறை ஒன்று தேவை என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வு ஆரம்பிக்க முன்னர், அதன் ஆணையாளர் வெளியிட்ட இலங்கை தொடர்பானமிகக்காட்டமான அறிக்கை தமிழ் மக்கள் மனங்களில் நம்பிக்கையை விதைத்திருந்தது. முன்னைய காலங்களைப் போன்றல்லாது, இந்த முறை ஐ.நா. மனித உரிமைகள் சபை தமிழ் மக்களின் பிரச்சினையை, சரியான முறையில் கையாளும் என்ற எதிர்ப்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது.


ஆனால் இப்போது வெளியாகியிருக்கும் தீர்மான வரைவு, ஐ.நா. சபையும் நீதி, நியாயங்களைத் தாண்டி ஏதோ ஒரு நிகழ்ச்சி நிரலில்தான் இயங்குகின்றது என்ற கசப்பான உண்மையை தமிழ் மக்களுக்குப் புரிய வைத்திருக்கின்றது. தமிழ் மக்களின் பிரச்சினையை உலக நாடுகள் இதயபூர்வமான முறையில் அணுகப் போவதில்லை, தங்களின் நலன்களுக்காகவே பயன்படுத்துகின்றன என்பதை மீண்டும் அழுத்திச் சொல்லியிருக்கின்றது.

இலங்கையைத் தங்கள் வழிக்குக் கொண்டுவருவதற்காகவே தமிழர் பிரச்சினையை உலக நாடுகள் கையில் எடுக்கின்றன. இலங்கை அரசு தங்கள் சொல் கேட்கும் பிள்ளையாக மாறினால் அவை தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கிஞ்சித்தும் கவலை கொள்ளப் போவதில்லை. இதுவே கடந்த கால அனுபவங்கள். இப்போதும் அதுவே நடந்திருக்கின்றது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர், உரிமைகளை அடைவதற்கோ அல்லது இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நீதியைப் பெற்றுக்கொள்வதற்கோ கட்டமைக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சி நிரல் இல்லை. ஆயுதப் போராட்டத்துக்குப் பின்னர் தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசியல் தலைமைகளும் அதைச் சரியான முறையில் திட்டமிடவில்லை. ஆண்டுக்கொரு முறை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அமர்வு காலத்தில் ஆலாய் பறப்பதுடன் அனைத்தும் முடிந்துவிடுகின்றது என்ற நிலைமையே இருக்கின்றது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் கையாள சரியான திட்டமிடலையும் கட்டமைப்பையும் உருவாக்குவது காலத்தின் தேவை. வெறுமனே ஐக்கிய நாடுகள் சபையையும், உலக நாடுகளையும் நம்பிக் கொண்டிருப்பதால் எதுவும் கிடைத்துவிடப் போவதில்லை.

தமிழ் மக்களை ஒன்றிணைத்து ஒரு பேரியக்கத்தை உருவாக்க வேண்டிய பொறுப்பு, இப்போதுள்ள தமிழ் அரசியல் தலைமைகளின் கைகளில் உள்ளது. அந்தப் பொறுப்புணர்ந்து அவர்கள் நடந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் எதிர்கால தமிழ்ச் சந்ததி நிச்சயம் அவர்களைப் பழிக்கும்.



# தமிழ் மக்கள் முதுகில் மீண்டும் குத்தியது தமிழ்க் கூட்டமைப்பு

### போட்டுத்தாக்குகிறது முன்னணி



**யாழ்ப்பாணம், மார்ச் 8**

**ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரைவை ஆதரித்ததன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்கள் முதுகில் மீண்டும் குத்தியுள்ளது. இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரைவில், இலங்கையை சர்வதேச நீதிமன்றுக்கு பாரப்படுத்தும் விடயம் இல்லை. இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், முன்வைக்கப்பட்டுள்ள வரைவை நிறைவேற்ற உறுப்பு நாடுகளைக் கோரியுள்ளார்.

இதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு துரோகமிழைத்துள்ளது. தமிழ் மக்களின் முதுகில் மீண்டும் குத்தியுள்ளது. நீண்டகாலமாக தமிழ் மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த தேர்தலில் ஆட்டம் கண்டிருந்தது. இருப்பினும் தற்போதும் அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே கூட்டமைப்பு செயற்படுகின்றது. எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஒற்றுமையை வலியுறுத்துவதாக, அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைப்பதாகத் தெரிவித்து எந்தவொரு சிவில் சமூகத்தினரோ, மத குருமாரோ வரவேண்டாம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நாம் இணைந்து பயணிக்கமாட்டோம், என்றார். (ஓ.26.319.20)

# சீனாவுக்கு வழங்கிய தீவுகளை கோருவது சிறுபிள்ளைத்தனமானது

### இந்தியாவைச் சாடுகிறார் விமல்



கொழும்பு, மார்ச் 8

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள நயினாதீவு, நெடுந்தீவு மற்றும் அனலைதீவு ஆகிய மூன்று தீவுகளையும் இந்தியாவிடம் ஒப்படைக்க அரசு ஒருபோதும் தயாரில்லை என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சரவை வழங்கியுள்ள அனுமதியின் பிரகாரம் குறித்த மூன்று தீவுகளிலும் மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

சீன நிறுவனத்துக்கே இந்தத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

அமைச்சரவையின் அனுமதியையும் மீறி மூன்று தீவுகளுக்கான திட்டங்களை தம்மிடம் ஒப்படைக்குமாறு இந்தியா கோருவது சிறுபிள்ளைத்தனமானது.

வெளிநாடுகள் திட்டங்களுக்கான கோரிக்கையை இலங்கையிடம் விடுக்க முடியும். ஆனால், அது தொடர்பில் அமைச்சரவைதான் இறுதி முடிவெடுக்கும். அமைச்சரவை எடுக்கும் தீர்மானத்தை உதாசீனப்படுத்தும் வகையில் எந்தத் தரப்பும் கருத்துக்களை வெளியிட முடியாது, என்றார். (ஓ.5.22)

# காணாமல் ஆக்கப்பட்டோர் புலிகளே; மக்கள் அல்ல

*பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்*

கொழும்பு, மார்ச் 8
வடக்கு, கிழக்கில் போரின்போது புலிகளும், அவர்களின் நெருங்கிய சகாக்களுமே காணாமற்போயுள்ளனர். பொதுமக்கள் எவரும் காணாமல் போகவில்லை. இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.
'ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைச் சமர்ப்பித்துள்ள நாடுகள் இவற்றைக் கருத்தில்கொள்ள வேண்டும்' என்றும் அவர் மேலும் கூறினார். (ஒ-5-22)



## லசந்தவின் கொலைக்கான நீதி தொடர்ந்தும் மறுக்கப்படுகிறது

*மகள் அஹிம்சா கருத்து*

கொழும்பு, மார்ச் 8
ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொலை செய்யப்பட்டு 12 வருடங்கள் கடந்துள்ள போதிலும், நீதியை நிலைநாட்டுவதை, இலங்கைத் தலைவர்கள் தொடர்ந்தும் நிராகரித்து வருகின்றனர் என்று அவரின் மகள் அஹிம்சா விக்ரமதுங்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
"எமக்கு தொடர்ந்தும் நீதி கிடைக்காத நிலையில், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சல் பச்சலெட்டுக்கு இது குறித்து எழுத்து மூலம் அறிவித்துள்ளேன்" என அஹிம்சா விக்ரமதுங்க அதில் மேலும் தெரிவித்துள்ளார்.
கொலை தொடர்பான வழக்கு எதிர்வரும் ஜுன் மாதம் 4 ஆம் திகதி கல்கிசை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள நிலையில் அஹிம்சா விக்ரமதுங்க இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். (ப)

## ஆர்ஜென்டீனாவின் நிலை இலங்கைக்கும் ஏற்படும்

*முன்னாள் எம்.பி ஹிருணிகா எச்சரிக்கை*

வவுனியா, மார்ச் 8
வடக்கில் தாயொருவர் வறுமையின் காரணமாக தன் 3 பிள்ளைகளுடன் கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொள்ள முயற்சித்துள்ளார். அரசால் அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளமையே இவ்வாறான சம்பவங்கள் பதிவாகக் காரணமாகும். வெகுவிரைவில் இலங்கை ஆர்ஜென்டீனா உள்ளிட்ட நாடுகளைப் போன்றதாகிவிடும் இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
அண்மையில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வருகின்றன.
பயணப்பொதிக்குள் சடலமாக பெண்ணொருவர் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து, அதனைக் கொண்டு நகைச்சுவை விடயங்கள் சமூக வலைத்தளங்களில் பகிரப்படுகின்றன. இவ்வாறு செயற்படுவது மிகவும் மோசமான தொரு விடயமாகும்.
குறித்த பெண்ணின் சடலம் எனக் கூறப்படும் புகைப்படம்



சமூக வலைத்தளங்களில் அதிகளவாக பகிரப்படுகிறது. இவ்வாறு புகைப்படத்தைப் பகிரும் ஒவ்வொருவரும் தமது குடும்பத்தில் இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றால் என்னவாகும் என்று சிந்தித்து முற்போக்காகச் செயற்பட வேண்டும்.
இதேபோன்று, கடந்த வாரம் 9 மாதக் குழந்தையொன்றை இளம் தாயொருவர் தாக்கும் காணொலி சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டது. இது கவலைக்குரிய விடயமாகும் எனவே இது போன்ற சம்பவங்கள் பதிவாகும்போது அவர்களை விமர்சிக்காது, அவர்கள் தொடர்பில் கணிப்பிட்டு கருத்துக்களை வெளியிடாது பொறுப்புடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றார். (ப)



## எருக்கலம்பிட்டி கிழக்கில் சௌபாக்கியா திட்டம்

மன்னார்,மார்ச் 8
சமுர்த்தி திணைக்களத்தால் "தேசிய சௌபாக்கியா வேலைத்திட்டம்" மன்னார் மாவட்டத்தின் எருக்கலம்பிட்டி கிழக்கு பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.
சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுய தொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு மற்றும் மன்னார் மாவட்டச் செயலகம், மன்னார் நகர பிரதேச செயலகம் ஆகியன இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன.
இந் நிகழ்வை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். மன்னார் மாவட்டச் செயலர் திருமதி. ஸ்டான்லி டி மெல் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மன்னார் நகர பிரதேச செயலர் பிரதீப், மன்னார் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மன்னார் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அரச உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஐ-213)

## குருதிக்கொடை முகாம்

மன்னார், மார்ச் 8
மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் குருதி வங்கியில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில், மன்னாரில் உள்ள இளைஞர்களால் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை குருதிக்கொடை முகாம் இடம் பெற்றது.
இந்தக் குருதிக்கொடை முகாமில் அதிகளவான இளைஞர்கள், இளைஞர் கழக அங்கத்தவர்கள் மற்றும் பசி இல்லா மன்னார் அமைப்பின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்கினர். (ய-56)



## பதநீர் முட்டி வீழ்ந்ததில் ஒருவர் காயம்

சாவகச்சேரி, மார்ச் 8
பனை மரத்திலிருந்து பதநீர் நிறைந்த முட்டி தலையில் வீழ்ந்ததில் ஒருவர் காயமடைந்துள்ளார். காயமடைந்த குறித்த நபர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி வீரசிங்கம் வீதியில் இடம்பெற்றது.
உயரமான பனைமரத்தின் பாளையில் பதநீருக்காக கட்டப்பட்டிருந்த முட்டி நிறைந்து தவறி, அவ்வழியே வந்த நபரின் தலையில் வீழ்ந்ததில் அவர் காயமடைந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ய-9)

## பெண் உரிமை மீறல்களைக் கண்டறிய நாடாளுமன்றில் விசேட குழு வேண்டும்

*பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் சபாநாயகருக்கு கடிதம்*

கொழும்பு, மார்ச் 8
இலங்கையில் பெண்களுக்கு எதிராக இடம்பெற்ற பாகுபாடுகள் மற்றும் பெண்களின் உரிமை மீறல்களை கண்டறிவதற்கு நாடாளுமன்ற விசேட குழுவொன்றை அமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தை உறுதி செய்யக்கூடிய பரிந்துரைகளை வழங்குவதற்கென இந்தக் குழுவை அமைக்குமாறு இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தலைமையிலான நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் எழுத்து மூலம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.
உத்தேச நாடாளுமன்றக் குழுவும் அதன் தவிசாளரும், சபாநாயகரால் நியமிக்கப்பட வேண்டும் என்பதுடன் அக்குழு 25 உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்க வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
பிரேரணையில் இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே மற்றும் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சீதா அரம்பேபொல, நாடாளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி ஹரிணி அமரசூரிய, ரோஹிணி குமாரி விஜேரத்ன, தலதா அத்துகோரல, கீதா சமன்மலீ குமாரசிங்ஹ, உள்ளிட்ட பலர் கையொப்பமிட்டுள்ளனர். (ப)

## கணினி கையளிப்பு

வவுனியா, மார்ச் 8
வவுனியா மாவட்ட செட்டிக்குளம் அன்புபுரம் நாமகள் வித்தியாலயத்துக்கு, புதிய கணினி மற்றும் புகைப்பட பிரதி இயந்திரம் உட்பட இலத்திரனியல் உபகரணங்கள் தமிழ் விருட்சம் அமைப்பினூடாக நேற்று பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டன.
நயினை மண்ணைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் நவரத்தினம் ரகுநாதனின் 1 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இந்த உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. (ற-110)

# வாழ்வாதாரம் வழங்கவுள்ளோம் என விவரங்கள் சேகரிக்கும் இராணுவத்தினர்

## அச்சத்தில் மக்கள்

**வவுனியா,மார்ச் 8**

**வவுனியா மாவட்டத்தின் சில கிராமங்களில் இராணுவத்தினர், வீடு வீடாகச் சென்று குடியிருப்பாளர்களின் விவரங்களை சேகரித்து வருகின்றனர். இதனால் ஒரு விதமான அச்சநிலை ஏற்பட்டுள்ளது என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.**

வவுனியா புதியவேலர் சின்னகுளத்தில் கடந்த இரண்டு நாள்களாக நான்கு இராணுவத்தினர் இவ்வாறான பதிவுகளை மேற்கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் இப் பதிவின்போது குடியிருப்பாளர்களிடம் வாழ்வாதாரம் வழங்கவுள்ளோம் என இராணுவத்தினர் தெரிவிக்கின்றனர் என. தம்மிடம் வீட்டில் வசிப்பவர்களின் பெயர், அடையாள அட்டை இலக்கம், வயது, தொலைபேசி இலக்கம் என்பவை கோரப்படுகின்றன எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

தற்போதைய சூழலில் இராணுவத்தினரால் இவ்வாறு தகவல் சேகரிக்கப்படுகின்றமை தொடர்பில் தமக்கு அச்சமான நிலை காணப்படுகின்றது எனவும் கிராம மக்கள் மேலும் தெரிவித்தனர்.

(ஐ-110)

# அத்தியாவசிய தேவைகள் நிறைவேற்றப்படவில்லை

## பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் தகவல்

கிளிநொச்சி, மார்ச் 8

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 2010 ஆம் ஆண்டு முதல் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் இடம்பெற்று வரும் நிலையில் இன்னமும் அங்கு வாழும் மக்களின் அவசர தேவைப்பாடுகள் நிறைவேற்றப்படாத நிலை காணப்படுகிறது என பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த வகையில் இந்தப் பிரதேசத்தில் இன்னமும் 748 நிரந்தர வீடுகளுக்கான தேவை உள்ளது இதேவேளை 770 நிரந்தர கிணறுகள், 233 மலசலகூடங்கள் ஆயிரத்து 810 நிலைபேறான வாழ்வாதாரம் மற்றும் 175 குடும்பங்களுக்கான காணித் தேவை உள்ளிட்ட அவசர தேவைப்பாடுகள் உள்ளன என பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் 136 குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்படாத நிலையில் உள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ச-6)

# விசேட பூசை வழிபாடு!

கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் இலங்கையில் வாழும் மக்கள் அனைவரும் மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், இறை ஆசி வேண்டி இன்று திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் சங்கானை சுழிபுரம் பறாளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

இந்த விசேட பூசை வழிபாடுகளின் நிறைவில் கோயிலின் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ மு.பால குருசாமிசர்மாவின் அருளாசி உரையும், வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் 'ஆலய தரிசனம்' நிகழ்ச்சியில் இன்று காலை 6.30 மணிக்கு இந் நிகழ்வு நேரடி ஒளிபரப்புச் செய்யப்படவுள்ளது.

(ற-இ)

# கரும்புத் தொழிற்சாலை அரச காணியை பயிர்ச்செய்கைக்கு பெற்றுத் தாருங்கள்!

## அக்கராயன் பிரதேச மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 8

கரும்புத் தொழிற்சாலை இயங்கிய அரச காணியை கிராம மக்களின் பயிர்ச்செய்கைக்கு பெற்றுத்தருமாறு அக்கராயன் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த அரச காணியை தனி நபரொருவர் ஆரம்பத்தில் பெற்று கரும்புச் செய்கையுடன் சர்க்கரைத் தொழிற்சாலையையும் இயக்கி வந்தார். இங்கு இருநூறுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணி புரிந்தனர்.

கடந்த 1986 ஆம் ஆண்டு காலப்பகுதியில், உள்நாட்டுப் போர் தீவிரமடைந்ததன் காரணத்தால், கரும்புத் தோட்டத்தை நடத்தியவரும், அதன் முகாமையாளர்களும் நாட்டை விட்டு வெளியேறினர். அதன்பின்னர் ஒரு முகாமையாளர் மட்டுமே இருந்தார். அவர் 200 ஏக்கர் வயல் நிலங்களையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த நிலையில், அவரும் யுத்தகாலத்தில் நாட்டை விட்டு வெளியேறிவிட்டார்.

மீள்குடியேற்றத்தின் பின்னர் கரும்புத் தோட்டத்தில் ஆரம்பத்தில் பணியாற்றிய பல குடும்பங்கள் இந்தக் காணியில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வந்தன.

கடந்த 2015 ஆம் ஆண்டு இந்தக் காணி தன்னுடையது என உரிமை கோரி கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவர் அரசியல் பலத்தின் மூலம் நெற்செய்கையில் ஈடுபட்ட மக்களை வெளியேற்றியதுடன் காணி தனக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

ஆனால், தகவலறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தகவல் அறிந்த போது அந்தக் காணி இதுவரை மாற்றியமைக்கப்படவில்லை என்பது தெரிவந்துள்ளது.

இதையடுத்து, அக்கராயன் பகுதியைச் சேர்ந்த பொருண்மியத்தில் நலிவடைந்த குடும்பங்கள், தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் மற்றும் பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் போன்றோர் இணைத்து ஓர் கூட்டுறவு அமைப்பை உருவாக்கி, அவர்களிடம் இந்த வயல் காணிகளை நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென அந்தப் பகுதி மக்கள் கடற்றொழில் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ற-12)

## மன்னார் மாவட்டத்தில்

# 138 குளங்கள் சீரமைப்பு



மன்னார், மார்ச் 8

நாடாளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் 'நீர்ப்பாசன செழிப்பு' தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் கிராமிய விவசாயக் குளங்கள் மற்றும் அணைக்கட்டுகள் ஆகியவற்றை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மன்னார் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் மன்னார் மாவட்டத்தில் சுமார் 138 குளங்களை மறுசீரமைப்பு செய்வதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய மன்னார் பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள தாராபுரம் மற்றும் கோரைக்குளம் மறுசீரமைப்பு பணிகளை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் ஆரம்பித்து வைத்தார்.

இந்த மறுசீரமைப்பு பணிகளுக்காக சுமார் 44 லட்சத்து 50 அயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மெல், மன்னார் பிரதேச செயலாளர், நீர்ப்பாசன திணைக்கள பணிப்பாளர், மன்னார் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், நீர்ப்பாசன பொறியியலாளர்கள், கமநல அபிவிருத்தி ஆணையாளர், பிரதம பொறியியலாளர் மற்றும் கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(ச-56)

# நொண்டிக் குதிரைக்கு சறுகியது சாட்டு; அமைச்சர் டக்ளஸின் நிலைப்பாடு இது

மக்கள் என்னை ஏற்றுக்கொண்டு அதிக வாக்குகளையும் ஆசனங்களையும் தந்தால் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற விடயத்தை செய்துகாட்டுவேன். செய்யாமல் நான் எதனையும் சொல்வதில்லை இவ்வாறு கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது;

அரசின் அமைச்சர்களுக்கு தனிப்பட்ட நிலைப்பாடுகள் விருப்பு வெறுப்புகள் இருக்கலாம். ஆனால் அரசுமாகாணசபை முறைமைக்கு மாறுபட்ட நிலைப்பாட்டை இன்னும் எடுக்கவில்லை. தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னரே மாகாண முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பாக நாம் அறிவிக்க முடியும். இன்று எமது மக்கள் துன்பங்களை அனுபவிக்கும் வகையிலான செயற்பாடுகளையே தமிழ் அரசியல்வாதிகள் முன்னெடுத்து வருகின்றனர். கோழி கூவி விடியாது. ஆனால் விடியும் நேரத்தைப்பார்த்து கோழி கூவும் போது மக்கள் மத்தியில் ஒரு அபிப்பிராயம் ஏற்படலாம். பிரச்சினைகளை தீராப்பிரச்சினையாக வைத்திருப்பதே தமிழ் தரப்புகளின் எண்ணம். அன்று நான் சொன்னதைக் கேட்டிருந்தால் இந்த இழப்புகளும் அழிவுகளும் வந்திருக்காது. நாம் சரியாகத் தான் பயணிக்கிறோம். எமது கருத்துக்கள் போதிய அளவு மக்கள் மத்தியில் செல்லவில்லை. அதுவே எங்களுடைய குறைபாடு. அப்படிச் சென்றிருந்தால் இழப்புகள் குறைந்திருக்கும். தமிழ்மக்கள் முள்ளிவாய்க்காலுக்கே சென்றிருக்கவேண்டிய தேவை வந்திருக்காது. மக்கள் என்னை ஏற்றுக்கொண்டு அதிக வாக்குகளையும் ஆசனங்களையும் தந்தால் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற விடயத்தை செய்துகாட்டுவேன். என்றார்.

(பு-110)

## ஆண்டு ஒன்று நிறைவின் நினைவாக

"வாழ்ந்தாலும் இறந்தாலும் - நாம்
ஆண்டவர்க்கே உரியவர்கள்" (உரோ 14:8)



மண்ணக மலர்வு 14 . 12 . 1952

விண்ணக மலர்வு 09 . 03 . 2020

அமரர் **மேரி அன்ரனிற்றா யேசுதாஸ்**

(வைத்திய கலாநிதி (D.A.M. (Cey), R.I.M.P)

**ஆண்டு ஒன்று கடந்த போதும்
அந்த நாள் நினைவு தான் என்றென்றும் ...**

வையத்தில் வாழ்ந்த வேளை
வைத்திய துறைக்கு உன்னை அர்ப்பணித்தாய் தாயே.
வறியவர் வாழ்வில் வசந்தம் வீசிட வகை பல செய்தாய் தாயே.
பள்ளிமுனை மக்களுக்கும் பல நற்சேவையாற்றி
மக்கள் மனங்களிலும் மலர்ந்து வாழ்ந்த தாயே.

பாதியிலே நோயுற்று - நீ பிறந்த
மண்ணை நாடி வந்தாய்.
பரலோகம் ஏறிட தொடர்
செபமாலை வடம் பிடித்தாய்.
இறை நியமப்படி இயன்றவரை வாழ்ந்ததால்
மேலும் துன்பங்கள் தொடராமல்
கொடிய Covid 19 உன்னை கொடுமைப்படுத்தாமல்
என் வேளை வந்ததால், உன் வேலைக்கு ஓய்வு தந்து
உன்னைக் காவு கொண்டவன்
**"நானே உன் கடவுள்"**
மருத்துவம் பார்க்க வந்த
மகளும் மருமகனும் திரும்புகின்ற வேளையிலே
வழி மறித்து அனைத்து கடமைகளும்
முடிக்க வைத்தாய்.
உடல் நலம் குன்றியதால் ஏக்கமுற்று
உனைப் பார்க்க மகனும், மருமகளும்
பல இடர் தாண்டி பறந்தோடி வந்தபோதும்,
மூடிய விழிகளோடு உன் மலர் முகம் காணவைத்தாய்.
அனைத்தும் நிறைவுற்ற பின்
மறுபடியும் Covid 19 பேரிடருக்குள் சிக்கிவிடாது
பாதுகாப்பாய் போக வைத்து
பயணத்தை நன்றே முடித்து வைத்தாய்.
நாளெல்லாம் வீட்டோடு
பணி செய்த மகனோடு மருமகள்
இன்றும் தான் தேம்புகின்றாள்.
நலம் யாவும் பெற்றிட தினம் துணை நின்றிடம்மா.
வாழ்ந்தபோது நாடி, தேடி, ஓடி, வந்த,
பேரர்கள் ஐவரும் பேரன்போடு
உனைத்தினம் அஞ்சலிப்பர்.

ஏளாறு ஆண்டுகள் ஆண்டவன் திருவுளப்படி
அப்பா நான் முடிந்தவரை உன்னோடு பயணித்தேன்.

விடியலைத் தேடி விண்ணகம் சென்றவளே,
இனி உனக்கெல்லாம் ஆண்டவன் மடிதானம்மா
விட்டகுறை மறந்து ..... நிதம்
விண்ணகத்தில் எமக்காய் வேண்டிடுவாய் தாயே.

என்றும் உம் நினைவுகளுடன்
கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரர்.

# கூட்டமைப்பில் இணைந்து பயணிப்பதே ஆரோக்கியம்

### முன்னாள் எம்.பி சந்திரகாந்தன் தெரிவிப்பு

**அம்பாறை, மார்ச் 8**
**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டுச் சென்றவர்கள் அந்தக் கூட்டமைப்புக்குள்ளே மீண்டும் வந்து இணைந்து ஒற்றுமைப்பட வேண்டும். போராட வேண்டும். அதனைவிடுத்து புதிய அமைப்பை, கட்சியை உருவாக்குவது ஒரு ஏமாற்று வேலைத்திட்டமாகவே இருக்கும். இவ்வாறு அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
பல கட்சிகளாக நாங்கள் பிரிந்து செல்லச் செல்ல, பேரினவாத சக்திகளுக்கு, தென்னிலங்கை அரசுக்கு எங்களைப் பிரிப்பதற்கு இலகுவாகிப் போய்விடும். காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைமையின் கீழ் உருவாக்கப்பட்டபோது, எங்களது பலம் சிறப்பாக இருந்தது. நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அப்போது 22 ஆக இருந்தது. இப்போதைய நிலை கழுதை தேய்ந்து கட்டெறும்பாகப் போனதாகத்தான் பார்க்க வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் எம்மிடம் இருக்கும் கட்சி, அரசியல் கருத்து வேறுபாடுகளைத் தூக்கி எறிந்து விட்டு மக்களுக்காகச் சிந்தித்து செயற்படவேண்டியது காலத்தின் அவசியம். பல கட்சிகளும் பல தீர்மானங்களை எடுப்பதனால் மக்களும் குழம்பி, எல்லோரும் குழம்பி, எதிர்கால சந்ததியினரும் குழம்பிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டுப் போன தலைவர்கள், தமிழ்த் தேசியத்துக்காக பாடுபட்ட தலைவர்களைத் தேடிக் கண்டுபிடித்து ஒரு குடைக்குக் கீழ் வந்து ஒரு பயணம் நடத்த வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் கசப்புணர்வுகளைக் களைந்து அதைப் பதிவுசெய்து முன்னகர்த்து தலே இப்போதைய தேவை. எப்படி ஜனாஸா விடயத்தில் முஸ்லிம் கட்சிகளிடம் ஒற்றுமை இல்லாமையை அரசு தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியதோ, அதே போலதான் அனைத்து தமிழ் கட்சிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஒற்றுமைக்குள் வராத வரையில் தமிழ் மக்களுக்கு விமோசனம் இல்லை - என்றார். (ப-150)

## 20 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

கிளிநொச்சி, மார்ச் 8
கிளிநொச்சி வேராவில் பகுதியில் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் 20 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் நேற்று வழங்கப்பட்டன.
தவக்காலத்தை முன்னிட்டு, தமது முன்னோர்களின் நினைவாகவும் அவர்களது ஆத்மாசாந்திக்காகவும் பெயர் குறிப்பிட விரும்பாத சங்க நலன் விரும்பி ஒருவர் வழங்கிய நிதியிலேயே இந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ந-222)



## யாழ். பண்பாட்டு மையத்தின் ஆளணியினருக்கு பயிற்சிகள்

### யாழ். மாநகர முதல்வர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 8
யாழ்ப்பாணம் பண்பாட்டு மையத்துக்கு என தற்காலிகமாக புதியவர்களை நியமித்து அவர்களுக்கான பயிற்சிகளை வழங்கத் திட்டமிட்டுள்ளோம் என்று யாழ். மாநகர சபையின் முதல்வர் மணிவண்ணன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் மாநகர சபையால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வேலைத்திட்டங்கள் மற்றும் எதிர்காலத்திட்டங்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று யாழ். மாநகரசபையில் இடம் பெற்றது. இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
யாழ்ப்பாண பண்பாட்டு மையத்தை மிக விரைவிலேயே திறப்பதற்கு திட்டமிட்டுள்ளோம். புதிய ஆளணிகளை உள்ளெடுப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம். இவர்களுக்கான பயிற்சியை மிக விரைவில் இந்திய நிறுவனங்களுடன் இணைந்து பெற்றுக்கொடுக்கத் திட்டமிட்டுள்ளோம் - என்றார். (ப-319,26)

நீத்தார் நயப்புரை

# சிறந்த மக்கள் சேவையாளர் கந்தசாமி குணரத்தினம்



சங்கரத்தையில் பிறந்து, வட்டு கிழக்கில் வாழ்ந்த சிறந்த மக்கள் சேவையாளர் கந்தசாமி குணரத்தினம் (04.12.2021) தனது 93 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.
இவர் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற பன்முக ஆளுமை கொண்டவராக 37 வருடங்கள் அரச சேவையில் நேர்மைத்திறன் கொண்ட அதிகாரியாக எல்லோராலும் போற்றப்படும் பெருந்தகையாளனாகக் காணப்பட்டார்.
தன்னுடைய இளைப்பாற்று காலத்தின் பின்னரும் ஆன்மீகப்பணி, பொதுப்பணி, ஆங்கிலக்கல்வி கற்பித்தல் என தனது வாழ்நாளில் இறுதி மூச்சு வரை மக்கள் மனதறிந்து சேவையாற்றும் உள்ளமும் கொண்டவர்.
உதவும் உள்ளம் கொண்ட கந்தசாமி குணரத்தினம் இந்த மண்ணை விட்டு விரைந்து சென்றது சங்கரத்தை மக்களைப் பெரிதும் பாதித்துவிட்டது. இவரது ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்.

**செல்வராஜா ரமேஷ்**, நவாலி

## இன்றைய நாள்

**மேடம்:** பணியிடத்தில் உங்களுக்குச் சாதகமான சூழ்நிலைகள் இருக்கும். பணம் சம்பந்தமான விடயங்களில் உங்கள் விருப்பம் நிறைவேறும். சலுகைகளுடன் வேலை கிடைக்கும்.

**இடபம்:** உற்சாகம் அதிகரிக்கும். பேச்சில் கவனம் தேவை. மற்றவரை மட்டம் தட்ட நினைத்து சிரமத்தில் சிக்க வேண்டாம். மன நிறைவு இருக்கும். கண் கண்ணாடி மாற்றுவீர்கள்.

**மிதுனம்:** எதிர்பாலினத்தினரால் உதவி ஒன்று கிடைக்கும். உங்களின் செல்வாக்கு கூடும். பதவி, பொறுப்புகள் கிடைக்கும். பிள்ளைகளால் சந்தோச செலவுகள் உண்டாகும்.

**கடகம்:** அலுவலகப் பணியின் போது கவனமாக இருப்பது அவசியம். தாமதம் நீங்கும். வரவு இருக்கும். முதலீட்டுச் செலவு உண்டாகலாம். தந்தையின் உதவிகள் கிடைக்கும். லட்சியங்களை அடைவீர்கள்.

**சிம்மம்:** பிள்ளைகளுக்காக அலைந்து தேவைகளை நிறைவேற்றுவீர்கள். தொடர்பு கொள்ள நினைத்த ஒருவர் தொலைபேசியில் அழைப்பார். தொழில் வளம் சிறப்பாக இருக்கும்.

**கன்னி:** உடை, நகை சேர்க்கை உண்டு. சுப நிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். பணியாளர்கள் எதிர்பார்த்த நல்ல செய்தி தேடி வரும். விரும்பிய விடயம் ஒன்று சிறு தாமதத்துக்குப் பின் நிறைவேறும்.

**துலாம்:** வாழ்வில் முன்னேறுவதற்கு வழி கிடைத்து மகிழ்வீர்கள். சிக்கனத்தைக் கையாளுவீர்கள். மன நிறைவு ஏற்படும். நல்லவர் ஒருவரின் ஆலோசனையை ஏற்று மாறுவீர்கள்.

**விருச்சிகம்:** பொறுமை தேவைப்படும். உடனடி உதவி எதிர்பார்க்காதீர்கள். உறவினர் செயல்கள் சற்று எரிச்சல் ஏற்ப டுத்தக் கூடும். அனுபவம் கை கொடுக்கும்.

**தனுசு:** நேர்மறை எண்ணங்கள் ஏற்படுவதால் மற்றவரைக் கவர்வீர்கள். நினைத்ததற்கு மாறானவருடைய உதவி ஒன்று கிடைக்கும். இடர்பாடுகளை சமாளித்து நிம்மதி அடைவீர்கள்.

**மகரம்:** சகோதரர்கள் குடும்பத்தில் சுபச்செய்தி உண்டு. பல நாள் போராடிய விடயத்தில் வெற்றியடைவீர்கள். அலுவலகத்தில் வளைந்து கொடுத்துப் போய் வெல்வீர்கள்.

**கும்பம்:** அலுவலகத்தில் நீங்கள் எதிர்பார்த்த விடயம் நிறைவேறும். அக்கம்பக்கத்தினரின் செயற்பாடுகளில் தலையிட வேண்டாம். எதிர்பாலினத்தினர் தங்கள் ரகசியத்தைப் பகிர்ந்து கொள்வர்.

**மீனம்:** சமீப காலத்தில் ஏற்பட்ட மன வருத்தங்கள் விலகும். நேர்மையான செயல் செய்து மன நிறைவடைவீர்கள். பொறுப்புக்களை மற்றவரை நம்பி ஒப்படைக்க வேண்டாம்.

## தவக்கால சிந்தனை

### மனமாற்றம் மகிழ்வு தரும்

"அப்பா கடவுளுக்கும் உமக்கும் எதிராகப் பாவம் செய்தேன். இனிமேல் நான் உம்முடைய மகன் எனக் கூறத் தகுதியற்றவன் என்னை உமது கூலியாள்களில் ஒருவனாக வைத்துக் கொள்ளும்' லூக்கா 15:18-19)

இது தனது பங்கை கேட்டுப்பெற்று தாறுமாறாக தவறுகள் புரிந்து சொத்தை அழித்து அறிவு தெளிந்து மனம்மாறி திருந்தி வந்த ஊதாரி மைந்தனின் அழுகுரல். பசியில் வாடும் மனிதருக்குத்தான் தெரியும் உணவின் அருமை. வறுமையில் வாழும் மக்களுக்குத்தான் பணத்தின் பெறுமதி தெரியும். வெயிலில் நடப்பவனுக்குத்தான் நிழலின் சிறப்புப் புரியும். விழுந்தவனுக்குத்தான் தெரியும் எழுந்திருப்பதன் கடினம். பாவத்தில் மூழ்கியவனுக்குத்தான் புரியும் மனம்மாறி புதிய வாழ்வு வாழ்வதன் அவசியம்.

ஊதாரி மகனின் கடந்தகால கசப்பான வாழ்வுதான் மனமாற்றத்துக்கு வழிவகுத்தது. மனம் திருந்தி குற்றமுணர்ந்து தந்தையை நோக்கிச் செல்லவேண்டும் என்ற ஆர்வத்தைக் கொடுத்தது அவனது வழிதவறிய வாழ்வுதான். எந்த ஒரு மனிதனும் தனது குற்றத்தை உணர்ந்து மனமாற்றம்பெற விரும்புகிறானோ அவன் உண்மை வாழ்வைக் கண்டுகொள்வார் என்பதை இது உணர்த்துகின்றது.

*எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை*



கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேசத்துக்குட்பட்ட இளைஞர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிகள் கிளிநொச்சி உருத்திரபுரம் உழவர் ஒன்றிய இளைஞர் கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. (ய-159)

# மதம் சார்ந்த புத்தகங்கள் படிப்பதால் நாடு சீரழியாது

## தேசிய விடுதலை மக்கள் முன்னணியின் தலைவர் தெரிவிப்பு

திருகோணமலை,மார்ச் 8

**'நல்ல மனிதர்களையும், ஒழுக்கம் உடைய மனிதர்களையும் உருவாக்கவே மதம் சார்ந்த புத்தகங்களை படிக்கின்றோம். மாறாக நாட்டை சீரழிப்பதற்கு அல்ல" இவ்வாறு தேசிய விடுதலை மக்கள் முன்னணியின் தலைவர் முஸம்மில் முகைதீன் தெரிவித்தார்.**



இஸ்லாமிய புத்தகங்களை இறக்குமதி செய்ய பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்படவேண்டும் என்ற செய்தியை சுங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இஸ்லாமிய புத்தகங்களை வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்வதால் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்பட வேண்டும் என கோரப்படுவது பெரிதும் கவலையளிக்கின்றது.

இவற்றின் மூலம் சிறுபான்மை சமூகமாகிய எங்களது உரிமைகள் தொடர்ந்தும் மறுக்கப்படுகின்றன. இதனை ஏற்க முடியாது இது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி சுதந்திரமாக மத கலாசாரத்தை மதித்து செயற்பட வேண்டும் - என்றார். (ஐ-40)

## பெண்ணின் தலையைத் தேட களத்துக்கு வந்தது 'பெனி'

கொழும்பு, மார்ச் 8

கொழும்பு - டாம் வீதியில் கடந்த முதலாம் திகதி சடலமாகக் கண்டெடுக்கப்பட்ட பெண்ணின் தலையைத் தேடி மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைக்ளுக்காக "பெனி" என்ற நாய் பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்த நாயின் உதவியுடன் சந்தேகநபரின் வீடு அமைந்துள்ள படல்கும்புர 5ஆம் தூண் பகுதியில் நேற்று தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிலையில், வாழைத் தோட்டமொன்றில் இரத்தக் கறைக்கு ஒத்த அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய கடந்த முதலாம் திகதி பகல் கொழும்பு - டாம் வீதி, ஐந்துலாம்பு சந்திக்கருகில் பயணப் பையிலிருந்து யுவதியின் தலையில்லாத சடலம் கண்டெடுக்கப்பட்டது. சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரை மாய்த்துக்கொண்டார். எனினும் பெண்ணின் தலை கண்டறியப்படாததால் விசாரணைகள் தொடர்கின்றன.தற்போதுவரை தலை மீட்கப்படாத நிலையில் "பெனி" என்ற நாயின் உதவியுடன் தேடுதல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ப)

## சுற்றுலாவிகளின் வருகை பெப்ரவரியில் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 8

நாட்டில் இந்த வருடத்தில் கடந்த ஜனவரி மாதத்தைவிட பெப்ரவரி மாதத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதத்தில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையானது ஆயிரத்து 682 ஆகக் காணப்பட்டது. எனினும் கடந்த பெப்ரவரி மாதத்தை பொறுத்தவரையில் நாட்டுக்கு வந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையானது 3 ஆயிரத்து 366 ஆக அதிகரித்துள்ளது என்று அந்தச் சபை தெரிவித்துள்ளது. எவ்வாறிருப்பினும் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகையானது 99.3 வீதத்தாலும் பெப்ரவரி மாதத்தில் 38 வீதத்தாலும் வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (ப)

# நித்தகைக்குளம் புனரமைப்பு அனுமதிகள் கிடைக்கவில்லை

## பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் தகவல்

**முல்லைத்தீவு, மார்ச் 8**

**முல்லைத்தீவு கரைதுறைப்பற்றில் அமைந்துள்ள நித்தகைக்குளம் சீர மைப்புக்கான அனுமதிகள் இதுவரை கிடைக்கவில்லை என முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நவரத்தினம் சுதாகரன் தெரிவித்தார்.**

இந்தக் குளத்தின் சீரமைப்புத் தொடர்பில், கடந்த ஓர் ஆண்டுக்கு முன்னர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. குளத்தின் தற்போதைய நிலவரம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட குமுழமுனை கிழக்கில் அமைந்துள்ள நித்த கைக்குளம் 30 ஆண்டுகளுக்கு மேலாக சீரமைக்கப்படாமல் உள்ளது. ஓர் ஆண்டுக்கு முன்னர், நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் நித்த கைக்குளப் பகுதிக்குச் சென்று குளத்தைச் சீரமைப்பதற்கான ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கை தயாரித்தனர். அந்த அறிக்கை உரிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் குளத்தைச் சீர மைப்பதற்கான நிதியோ அல்லது அனுமதியோ இதுவரை கிடைக்கவில்லை. நித்தகைக் குளத்தின் கீழ் 600 ஏக்கரில் வயல் நிலம் உள்ளது. குளத்தைச் சீரமைத்தால் கூடுதலான நிலப் பரப்பில் பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியும்- என்றார். (வ-13)



# சௌபாக்கியா கிராமம் திட்டம் முல்லைத்தீவில்

முல்லைத்தீவு, மார்ச் 8

சௌபாக்கியா உற்பத்திக் கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு, கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குமாரபுரம் கிராம மக்கள் சங்க பொதுநோக்கு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் ம.உமாமகள் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான கே.காதர் மஸ்தான் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு இத் திட்டத்தை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார். இத் திட்டத்தின் ஊடாக உற்பத்திகளை ஊக்குவித்தல், தேசிய உற்பத்தியை அதிகரித்தல், கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தி மாற்று வருமான வழிகளை ஏற்படுத்தல், சிறிய மற்றும் நடுத்தர மேம்பாட்டினூடாக வேலையின்மையைக் குறைத்தல் மற்றும் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்தல் போன்ற செயற்பாடுகளை ஊக்குவித்து, சிறந்த பயனைப் பெற எதிர்பார்க்கப்படுகிறது. (வ)



புலம்பெயர்ந்து வெளிநாட்டில் வசித்து வரும் தாயக உறவு ஒருவரின் நிதிப் பங்களிப்பில் வவுனியா பாலமோட்டைப் பகுதியில், வசித்து வரும் பொருண்மியம் நலிந்த பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கு, வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை உறுப்பினர் கோகிலகுமார் அஞ்சலாவால் கோழிகளுடன் கோழிக் கூடும் உருவாக்கப்பட்டு கையளிக்கப்பட்டது. (ற-இ)

# போக்குவரத்து தினத்தை முன்னிட்டு மர நடுகை!

யாழ்ப்பாணம், மார்ச் 8

சர்வதேச போக்குவரத்து தினத்தை முன்னிட்டு கொடிகாமம் ரயில் நிலைய வளாகத்தில் மரநடுகை நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு புகையிரத நிலைய அதிபர் ஜெ.சஞ்சீபன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபையின் உபதவிசாளர் செ.மயூரன், கொடிகாமம் மக்கள் வங்கி முகாமையாளர் சி.கோபிகிருஷ்ணா, மக்கள் வங்கி உத்தியோகத்தர் சு. கோகுலரூபன், புகையிரத நிலைய அதிபர்களான உ. சதீஸ்குமார், ச.விதுசன் மற்றும் ந.புஸ்பகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இம் மரநடுகையின் போது புகையிரத வளாகத்தில் கொய்யா, மா, மரமுந்திரி மற்றும் ஜம்புநாவல் ஆகிய பயன் தரு மரங்கள் நட்டப்பட்டன. (ய-159)



# பச்சிலைப்பள்ளியில் குடியமர காத்திருக்கும் 136 குடும்பங்கள்

கிளிநொச்சி, மார்ச் 8

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் இன்னமும் 136 குடும்பங்கள் மீள்குடியமர வேண்டியுள்ளது என பிரதேச செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. 2006 ஆம் ஆண்டு இக் கிராமத்திலிருந்து இடப்பெயர்வில் 3 ஆயிரத்து 500 குடும்பங்கள் இடம்பெயர்ந்து வெளியேறியுள்ளன. 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 இறுதிவரை 4 ஆயிரத்து 632 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து 482 பேர் இதுவரை இங்கு மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். இன்னமும் 136 குடும்பங்களைச் சேர்ந்த 605 பேர் மீள்குடியமர வேண்டிள்ளனர்.

இத்தாவில் கிராமத்தில் 7 குடும்பங்களும், முகமாலை கிராமத்தில் 41 குடும்பங்களும், வேம்பொடுகேணி கிராமத்தில் 88 குடும்பங்களும் மீள்குடியமர வேண்டியுள்ளது. இந்தக் குடும்பங்களுக்குச் சொந்தமான இடங்களில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் தற்போதும் அகற்றப்பட்டு வருகின்றமையே இதுவரை மீள் குடியமர்த்தப்படாமைக்குக் காரணம் என பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ-6)



# மகளிர் தினத்தை முன்னிட்டு உலருணவுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 8

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பிரதேசத்தில் உள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஆயிரம் பெண்களுக்கு உலர் உணவுப்பொதிகள், யாழ். சுன்னாகம் தெற்கு பிரதேசத்திலுள்ள பொது விளையாட்டு மைதானத்தில் யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேராவின் தலைமையில் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. (ச)

# உறுப்பினரால் காடழிப்பு? கூட்டத்தில் கடும் வாதம்!

முல்லைத்தீவு, மார்ச் 8

பிரதேச சபை உறுப்பினர் ஒருவரால் காடழிப்பு மேற்கொள்ளப்படுகின்றது என்று வெளியாகிய செய்தி தொடர்பில் ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கடும் வாதம் இடம்பெற்றது.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட மணவாளன்பட்ட முறிப்பு கிராமத்தில் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரால் 20 ஏக்கருக்கும் அதிகமான காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன என ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பில் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அவ்வாறான சம்பவங்கள் எவையும் இடம்பெறவில்லை எனவும், அந்தக் காணிகள் 1961ஆம் ஆண்டிலிருந்து பராமரிக்கப்பட்டு அவற்றுக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டு, அதற்கான ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டன.

அந்தச் செய்தி அரசியல் நோக்கம் கருதி வெளியிடப்பட்டுள்ளது எனவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.


இதற்கிடையே கூட்ட நிகழ்வுகளைப் பதிவுசெய்து கொண்டிருந்த ஊடகவியலாளர் ஒருவர் குறுக்கிட்டு குறித்த செய்தியைத் தானே வெளியிட்டேன் எனவும், அந்த இடத்தை பார்வையிட அனைவரும் வர வேண்டும் என்றும் அழைத்தார்.

கூட்டத்தை தலைமைதாங்கி நடத்திக் கொண்டிருந்த அபிவிருத்திக் குழுத் தலைவர் காதர் மஸ்தான் செய்தியாளர் சொல்வது போல் நடந்திருந்தால் செய்தியாளரே பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய முடியும் என்று தெரிவித்திருந்தார்.

இதேவேளை அரசியல் நோக்கங்களுக்காக தனி நபரையும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம், வனவளத் திணைக்களம் மற்றும் ஒட்டுசுட்டான் பொலிஸ் ஆகியவற்றையும் தவறாகக்காட்டி அந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது என்று கூட்டத்தில் கலந்துகொண்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் குற்றஞ்சாட்டினர். (வ-13)

# 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
18 . 04 . 1927



மறைவு
08 . 02 . 2021

## அமரர் நமசிவாயம் பாலசிங்கம்

கடந்த 08.02.2021 திங்கட்கிழமை சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் நமசிவாயம் பாலசிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 10.03.2021 புதன்கிழமை காலை நான்கு மணி அளவில் அன்னாரின் வீட்டில் நடைபெற்று, சபிண்டிகரணக் கிரியையும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் முற்பகல் 10.00 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாவில் ஒழுங்கை
புலோலி கிழக்கு,
புலோலி

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம்
13 - 06 - 1940



மறைவு
05 - 03 - 2021

## வீமர் செல்லத்துரை

உடுவில் ஸ்ரீலங்கா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீமர் செல்லத்துரை அவர்கள் கடந்த 05.03.2021 வெள்ளிக்கிழமை அன்று சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீமர் பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் அளவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான முருகன், திருப்பதி தம்பதிகளின் அன்பு மருமகனும் இரஞ்சிதமலரின் அன்புக் கணவரும் ஜெனந்தன் (பிரான்ஸ்) ஜெயாழினி (வகிதா), ஜெய்சிகா (தீபா, சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் உமா, நீதிராஜா, (ஆசிரியர், யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்), ஜெயராஜா ஆகியோரின் மாமனாரும், றோகித், நீதிகா, றின்திகா, ஜெனதிகா, நீருஜன், நிதர்சிக்கா, நிதா, றொனுஜன், றிஸ்மிகா, டீனுஜன், ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற ஆச்சிப்பிள்ளை, சின்னத்தங்கைச்சி, சின்னத்துரை, இராஜதுரை (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை, செல்லையா, பஞ்சாதேவி, கனகரஞ்சிதம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள், இன்று (08.03.2021) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஸ்ரீலங்கா வீதி,
உடுவில் வடக்கு,
சுன்னாகம்.

தகவல்
குடும்பத்தினர்
T.P 077 071 2523, 077 646 6959

# மரண அறிவித்தல்

## திரு. நவரத்தினம் ஞானலிங்கம்



யாழ். குப்பிளானைப் பிறப்பிடமாகவும், வவுனியா பண்டாரிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் ஞானலிங்கம் அவர்கள் 06.03.2021 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம், தங்கம்மா தம்பதி களின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான இராமநாதன் வாலாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சாராதா தேவி (சாந்தா) அவர்களின் அன்புக் கணவரும், அஜந்தன் (சுதன்-லண்டன்), அனுராஜ் (கனடா), அமல்ராஜ் (ரஜீவ் - சுவிஸ்), ஞானறூபா (றூபா- லண்டன்), சஞ்சீவ்ராஜ் (விதுஷன் - இலங்கை) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெகசோதிலிங்கம் (சுவிஸ்), யோகமலர் (இலங்கை) சாந்தமலர் (நெதர்லாந்து) ஆகியோரின் அன்பு சகோதரரும், பரஞ்சோதி (இலங்கை) காலஞ்சென்ற சிவசோதி (சுவிஸ்) அருட்சோதி (கனடா), மோகனதாஸ் (சுவிஸ்), சச்சிதானந்தம் (லண்டன்), மீனலோஜினி (சுவிஸ்) இராமச்சந்திரன் (இலங்கை) சாந்தி (சுவிஸ்) விமல்ராஜ் (கொலண்ட்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கண்ணா (இலங்கை), சுதா(இலங்கை) ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் பேரின்பன் அவர் களின் ஒன்று விட்ட சகோதரரும், அஸ்றியா, ஆதிஷ், அஸ்வின், அஸ்விதா, அனுஸ்கா, அக்ஸரா, அக்ஸரன், அய்ஷன், அஸ்மிதா, அஸ்மிரா ஆகி யோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2021) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் குப்பிளானில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குப்பிளான் காடாகரம்பை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

தோற்றம்
11.03.1956

மறைவு
06.03.2021

சஞ்சிவ்ராஜ் (மகன்)
077 067 2138

# பெறுகை அறிவித்தல்
## வேலணை பிரதேசசபை
## பிரதேச சபைகளை வலுப்படுத்தும் வேலைத்திட்டம்
### வேலையின் பெயர்:- கடைத்தொகுதி நிர்மாண வேலைத்திட்டம் (கட்டம்-1)
### ஒப்பந்த இல:- NP/14/41(18)/2/Stren.C/2021/01

01. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு. பிரதேச சபைகளை வலுப்படுத்தும் வேலைத் திட்டம் (மூலதனம்) எனும் திட்டத்திற்காக நிதியினைப் பெற்றுள்ளதுடன் இந்நிதியின் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கடைத்தொகுதி திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தலைவர். பிரதேச பெறுகைக்குழு. வேலணைப்பிரதேசசபை. வங்களாவடி வேலணை. தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டட நிர்மாண வேலைக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர் / செயலாளர். வேலணைப்பிரதேசசபை (தொலைபேசி: 021 221 1505, தொலைநகல்: 021 221 1506, மின்னஞ்சல் - velanaips@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 2021.03.08 ம் திகதியில் இருந்து 2021.03.29ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வேலைநாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 16.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம். தேவையான தகைமைகள். கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் கேள்வி ஆவணத்தில் பகுதி 5 (Schedule) இல் காட்டப்பட்டுள்ளது.

05. கேள்வி பெறத்தகுதியுடையவராவதற்கு. வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராக வும். அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டட அமைப்புக்கான நிர்மாணகைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) பதிவுமேற்கொள்ளப் பட்டிருத்தல் வேண்டும்

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் தவிசாளர் / செயலாளர். வேலணைப்பிரதேசசபை. வேலணை எனும் இடத்திலிருந்து 2021.03.08 ஆம் திகதியிலிருந்து 2021.03.29 வரைகாலை 09.00 மணிக்கும் 14.30 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3,000.00 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

07. கேள்விகள் இரு பிரதிகளில் (மூலப்பிரதி. பிரதி) தயாரிக்கப்பட்டு தலைவர். பிரதேச பெறுகைக்குழு. வேலணைப் பிரதேசசபை வேலணை எனும் முகவரிக்கு 2021.03.30 ஆம் திகதி பிற்பகல் 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்வி இலக்கம் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்விகோரல் பற்றியமுன் கூட்டிய கூட்டம் 2021.03.19 ஆம் திகதிமு.ப. 10.30 மணிக்கு வேலணை பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ள முடியும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் (வீதி) | வேண்டப்படும் கேள்விப் பிணை – பிணை வைப்பு (ரூ) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு தொகை | செல்லு படியாகும் காலம் |
| NP/14/41(18)2/Stren .C /2021/01 | கடைத்தாகுதி நிர்மாண வேலை வங்களாவடி வேலணை (கட்டம்-1) | 8.66 | 135 நாட்கள் | C6 / C7 (கட்டடம்) | 87,000 | 13.07.2021 |

தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கோரப்படுகின்ற கேள்வியானது மதிப்பீட்டு தொகை 50 மில்லியனுக்கு குறைவான தாக இருப்பதனால் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA இனது தர முன்னுரிமை பொதுநிதி அறிக்கைகள் 4/2016(iii) உம் பொது நிதி அறிக்கை 3/2020 மற்றும் 3/2020(i) திகதிகள் முறையே 09.10.2020 மற்றும் 11.01.2021 பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**வேலணைபிரதேசசபை**
**வடமாகாணம்.**
**2021.03.08**

# மன ரீதியான பலம் பெண்களிடமே!

*மகளிர் தின வாழ்த்து செய்தியில் செல்வம் எம்.பி. தெரிவிப்பு*

மன்னார், மார்ச் 8
மன ரீதியாக பலம் கொண்டவர்கள் பெண்களே! என்று, நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிட்டுள்ளார்.
சர்வதேச மகளிர் தினம் இன்றாகும். அதனையொட்டி அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:
உலகில் ஆண்கள் உடல் ரீதியாக பலமுள்ளவர்களாகவும் பெண்கள் உள ரீதியாக பலம் கொண்வர்களாகவும் இருக்கின்றார்கள். தைரியமான பெண்கள் என்ற அடிப்படையில் சர்வதேச விருதை மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சட்டத்தரணி பெற்றுள்ளார் என்பது பெருமையாக உள்ளது. பெண்கள் வெறுமனே புத்தகக் கல்வியை மாத்திரம் நம்பி இருக்காமல் தனித்திறமைகளை வெளிக்கொணர்ந்து தாங்கள் விரும்பிய துறையில் சாதிக்க வேண்டும். தற்போதைய காலம் பெண்களின் வெற்றிக்கான காலமாக உள்ளதால், அனைத்து பெண்களும் உள மகிழ்ச்சியுடன் சிறந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டும். அதற்காகப் போராடிக் கொண்டிருக்கும் பெண்களுக்கு இன்றைய மகளிர் தினத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.
- என்றுள்ளது. (த-213)

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**

புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**U.S.A பாம்**
குளப்பிட்டி வீதி,ஆனைக்கோட்டை
077 868 9500

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
24
-
06
-
1946



மறைவு
06
-
02
-
2021

## அமரர் சுப்பிரமணியம் பாலச்சந்திரன்
(நாதாயணன்)

கடந்த 06.02.2021 அன்று சிவபதமடைந்த அமரர் சுப்பிரமணியம் பாலச்சந்திரன் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (08.03.2021) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 54, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

திருமதி.ப.விமலநாயகம்
ச.சசீந்திரன் (077 851 1265)

# மரண அறிவித்தல்

தோற்றம்
18
-
11
-
1969



மறைவு
24
-
02
-
2021

## சின்னையா ரமேஸ்வரன் (ரமேஸ்)

யாழ். கோண்டாவில் கிழக்கு எம்.எஸ் வீதியைப் பிறப்பிடமாகவும். பிரான்ஸ் Drancy ஐ வதிவிடமாகவும் கொண்ட சின்னையா ரமேஸ்வரன் அவர்கள் 24.02.2021 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் சுபாபதி சின்னையா தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ரேணுமதி (பிரான்ஸ்) யின் அன்புக் கணவரும், ரிதுஷன் (பிரான்ஸ்), ரிஷா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மோகன் (கனடா), அகிலா (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுதன், ரமேஷ், சுரேஸ், ரமணி, சேகர், சுதாகர், சுமதி, குலநந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கணேஸ், புஸ்பா, சுபாஜினி, பெனடிக், சிவபாமா, ஜெயனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகலனும், நிதேஸ், நிலக்ஷி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், சாங்கவி, இன்மாறன், ரவீனா, சுவர்ணா, ரஜந், சாகித், ஆதித், வில்லியம், யூலியான், ரிசாந் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.03.2021 அன்று Crematorium De villetaneuse - Des Joncherolles 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France இல் நடைபெறும். நிகழ்வுகளை WWW.lankasri.com என்ற இணையத்தளத்தில் நேரலையாகப் பார்வையிடலாம் (09.03.2021 12.30Pm - 1.30Pm பிரான்ஸ்)
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு**
**சின்னையா (இலங்கை) 021 222 7846**
**ரிதுஷன் (பிரான்ஸ்) 0033782078290**
**மோகன் (கனடா) 0014168590065**
**சுதன் (இலங்கை) 077 935 3032**

**தகவல்**
**குடும்பத்தினர்**
**எம்.எஸ் வீதி,**
**கோண்டாவில் கிழக்கு கோண்டாவில்**

# பெண்மையின்றி ஏது இவ்வுலகு



■ தெல்லியூர்தேவி

## இன்று சர்வதேச மகளிர் தினம்

மார்ச் 8ஆம் திகதி சர்வதேச மகளிர் தினமாகும். சமுதாயத்தில், பண்பாட்டில், பொருளாதாரத்தில், அரசியலில் பெண்களுக்குக் கிடைக்கப்பெற்ற சுதந்திரத்தைக் சர்வதேசமே கொண்டாடி வரும் நாள் என்பது தெரிந்த விடயம்தான். ஆனால், இன்று உலகளாவிய நாடுகளில் உள்ள அனைத்துப் பெண்களும் தமது சுதந்திரங்களையும், உரிமைகளையும் உணர்ந்துள்ளார்களா? அடையாளம் கண்டுள்ளார்களா ? என்றால் பதில் எதிர்மறையாகத்தான் அமையும்.

### நூற்றாண்டு கடந்த கொண்டாட்டங்கள்

வீட்டுக்குள் இருந்த பெண்கள் தற்போது வானிலும் பறந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் அதற்கு வித்திட்ட பிரெஞ்சுப் புரட்சியும் அதனைத் தொடர்ந்த புரட்சிகளின் தாக்கமும் கணிசமாக காரணம். இவற்றின் வெற்றித்தினமாகவே இந்த மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இது நீண்ட வரலாற்றையும் பாரம்பரியத்தையும் கொண்ட ஒரு நாளாகவும் அமைகின்றது. ஐந்தல்ல பத்தல்ல இன்று கொண்டாடப்படும் மகளிர்தினம் 110ஆவது ஆண்டாக அமைகின்றது. கடந்த 109 வருடங்களில் முன்னெடுக்கப்பட்ட இந்தக் கொண்டாட்டங்கள் இதுவரை பெண்கள் மத்தியில் பல்வேறுபட்ட விழிப்புணர்வையும், எண்ணிலடங்காத செயற்றிட்டங்களையும் ஏற்படுத்த - முன்னெடுக்கக் காரணமாகியுள்ளன என்பதையும் இங்கு ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

இன்று பெண்கள் தங்களுக்குள் மறைந்துள்ள சக்தியினை உணர்ந்து களமாற்றுபவர்களாக விளங்குகின்றனர். இந்தத் தினத்தை நாங்கள் சாதாரணமாகக் கொண்டாடினாலும் இந்தத் தினத்துக்குக் காரணமான போராட்டங்களும் வெற்றிகளும் எளிதாகக் கிடைத்தவையல்ல.

பெண்களின் பலத்த போராட்டங்களின் பெறுபேறே இந்தத் தினமாகும். ஆதலால் இத்தகைய செயற்றிட்டங்களையும் போராட்டங்களையும் இனியும் முன்னெடுக்க வேண்டிய தேவை பெண்களுக்கும் அவர்கள் சார் அமைப்புக்களும் தவிர்க்க முடியாததாகின்றது.

### ஆண்கள் முன்னுள்ள கடமை

மகளிரைத் தமது தாயாக, மனைவியாக, சகோதரியாக, மகளாக இப்படி எத்தனையோ உறவு முறைகொண்டாடும் ஆண்கள், தமது வாழ்க்கையில் தவிர்க்க முடியாத இரண்டறக் கலந்துள்ள பெண் இனத்தை உரியமுறையில் நடத்துகின்றோமா என்று தம்மைத் தாமே சுய பரிசீலனை செய்துகொள்ள வேண்டும். அத்துடன் பெண்கள் தொடர்பான மூட நம்பிக்கைகளை இல்லாதொழிப்பதிலும், அவர்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதிலும் ஆணினம் கொண்டுள்ள கடமையை அவர்களுக்கே உணர்த்தும் நாளாகவும் இன்றையதினம் அமைகின்றது.

உடலுறுதி கொண்ட ஆணைவிட மன உறுதி கொண்டவள் பெண் என்பவள் உள்ளங்கை நெல்லிக்கனி போன்றவள். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்கும் உந்து சக்தியாகவும் ஊன்றுகோலாகவும் திகழ்பவள் பெண்ணே. தோல்விகண்டு துவண்டுவிடாமல் அந்த தோல்வியை வெற்றிக்கான படிக்கல்லாக மாற்றி வெற்றிகண்டு நிமிர்ந்து நிற்பவளும் பெண்ணே என்றால் மாற்றுக் கருத்துக்கிடமேயில்லை. இதனையே பெய்யாமொழிப் புலவரும்

'தற்காத்து தற்கொண்டான் பேணி தகைசான்ற சொற்காத்து சோர்விலாள் பெண்' என வர்ணித்துள்ளார்.

பெண்கள் எப்பொழுதும் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளக் கூடிய வீரத்தினையும் விழிப்புணர்வையும் வளர்த்துக்கொள்ள முயல வேண்டும். பெண்மையைத் தாங்களே பேணிக் காப்பதுடன் ஆண்களும் பெண்மையைப் பேணிக் காப்பாற்றுவதன் மூலம் இருபகுதியினரும் சமூகக் கட்டமைப்பில் பெருமதிப்புக்கு உரியவராகின்றனர்.



### இன்றும் தொடர்கதை

இன்றும் ஏராளமான பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கும், தீய நாவுகளின் அசிங்கப் பேச்சுக்களையும் சந்திக்க வேண்டியவர்களாகவே உள்ளனர். பல பெண்கள் தமக்கு ஏற்பட்ட அநீதிகளை வெளியில் சொல்லவே அச்சப்பட்டவர்களாகத் தம் வாழ்க்கையைக் கொண்டுசெல்கின்றனர். எத்தனையோ பெண்கள் தினம் கொண்டாடப்பட்ட பின்னரும், எத்தனையோ விழிப்புணர்வுச் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னரும்கூட முழுமையான அளவில் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்படவில்லை என்பதைத்தான் இந்த பின்னடைவுகள் எமக்கு எண்பிக்கின்றன.

சிவம் இன்றி சக்தி இல்லை, சக்தி இன்றி சிவம் இல்லை என்ற தத்துவத்தினைத் தாரக மந்திரமாகக்கொண்டு பெண்களையும் அவர்களின் மகிமையையும் முழு உலகும் உணரும் படியாகச் செயற்படுவோம். ■

---

# மகளிர் பெருமை மர்நிலம் எங்கும்....!!



*மாதராய் பெண்குலம் பிறந்திடத்தான்!*
*மாதவம் செய்திடல் வேண்டுமம்மா!!*
*மாகவி மன்னவன் பாரதியின் !*
*மாதர்புகழ் போற்றிடும் வரிகளம்மா !!*

*அவனியில் அழகாய் இருஇனங்கள் !*
*ஆண்டவன் படைத்தான் ஆண் பெண்எனவே!!*
*கவனித்துப் பார்த்தால் கவுரவமோ !*
*கண்டிப்பாகப் பெண்களுக்குத்தான் !!*

*ஏன் இந்தச்சிறப்பென எவர் கேட்டிடினும் !*
*எவ்வித தயக்கம் ஏதுமின்றி சொல்வேன்!!*
*தானேயென நினையாது தனக்கென எதுவும் கேளாமல்!*
*தரணியிலே உயிர்வாழும் தெய்வம் அவளேன்பேன் !!*

*உடலும் உயிரும் ஒன்றிணைத்து அங்கு !*
*உள்ளே வளர்ப்பவள் உத்தமிப் பெண் அவளே!!*
*கடல்போல் ஆழ்ந்த மனமும் பெற்றாய் !!*
*கல்லே கணவன் ஆனாலும் கடவுள் என்றாய்!!*

*பேசிக்கொண்டே போகலாமே பெண்அவள்*
*பெற்ற பெரும் புகழ் பெருமைகளை!!*
*நாசிதனில் நல்லதோர் மூச்சுக்காற்று*
*நமக்குள் வந்து போகும்வரை !!*

*பெண் அவள் இப்புவியின் கண் அவள்!*
*பெற்றவளும் அவளே!பெறுபவளும் அவளே !!*
*ஆண்குலம் நீங்கள் தினம்தினமே !*
*அணைத்து மகிழுங்கள் குளிர் நிலவு அவளே !!*

**கவிஞர் பாலு**

## நினைவழியா ஓராண்டு

தோற்றம் 06 - 03 - 1938



மறைவு 18 - 02 - 2020

அமரர்

### சின்னப்பு செல்வரத்தினம்

திதி : தேய்பிறை தசமி 08.03.2021

பாசத்தின் ஒளிவிளக்காய் பண்பின் சிகரமாய்
எம்முடன் வாழ்ந்த எமது ஆருயிர் அப்பா
காலத்தின் கணக்கில் - நீங்கள்
அமரலோகம் போனாலும்
எங்கள் உள்ளங்களில் என்றும்
நீங்காத நினைவுகளுடன் நிலைத்திருப்பீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும்,
இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!!

மீசாலை கிழக்கு, மீசாலை.

உங்கள் நினைவுகளுடன் குடும்பத்தினர்


# ரூ.11 மில்லியன் செலவில் தவசிக்குளம் புனரமைப்பு

மன்னார், மார்ச் 8

மன்னார் - முசலி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தவசிக்குளம் புனரமைப்புக்கான அங்குரார்ப்பண நிகழ்வு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தானின் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்தக் குளப் புனரமைப்புக்கு 11 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.



இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் முசலி பிரதேச செயலாளர், நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர், மன்னார் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், உதவித் திட்ட பணிப்பாளர், நீர்ப்பாசன பொறியியலாளர்கள், கமநல அபிவிருத்தி ஆணையாளர், பிரதம பொறியியலாளர் மற்றும் கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-213)


## மணிவிழா வாழ்த்து

### திருமதி திலகவதி கருணாகரன்

(SLTS-I B.A.Dip.in Dance (India))



எமது பாடசாலையில் நடன ஆசிரியராக சேவையாற்றி இன்று (08.03.2021) திங்கட்கிழமை ஓய்வுபெறும் திருமதி திலகவதி கருணாகரன் அவர்கள் தமது ஓய்வு காலத்தில் சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

**சேவை விபரம்**

01.09.1992 – 16.01.2014 யா/ இணுவில் மத்திய கல்லூரி

17.01.2014 – 25.02.2014 யா/ ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை

26.02.2014 – 07.03.2021 யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்

வாழ்த்துவோர்
பாடசாலைச் சமூகம்
யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்



## பெறுகை அறிவித்தல்
## வேலணை பிரதேசசபை
## குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி திட்டம்

வேலையின் பெயர்:- மண்காடு வீதி திருத்தம்

ஒப்பந்த இல:- **NP/14/41(18)/2/PSDG/2021/01**

01. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு ,குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி திட்டம் எனும் திட்டத்திற்காக நிதியினைப் பெற்றுள்ளதுடன் இந்நிதியின் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மண்காடு வீதி திருத்தம் திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. தலைவர், பிரதேச பெறுகைக்குழு, வேலணைப்பிரதேசசபை, வங்களாவடி வேலணை. தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட பெருந்தெருக்கள் நிர்மாண வேலைக்காக கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தவிசாளர்/செயலாளர், வேலணைப்பிரதேசசபை** (தொலைபேசி: **021 221 1505**, தொலைநகல்: **021 221 1506,மின்னஞ்சல்- velanaips@gmail.com** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 2021.03.08 ம் திகதியில் இருந்து 2021.03.22ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வேலைநாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 16.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம். தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் கேள்வி ஆவணத்தில் பகுதி 5 (Schedule) இல் காட்டப்பட்டுள்ளது.
05. கேள்வி பெறத்தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் **பெருந்தெருக்கள் அபிவிருத்திகான** நிர்மாணகைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை(CIDA) பதிவுமேற்கொள்ளப் பட்டிருத்தல் வேண்டும்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் தவிசாளர்/செயலாளர், வேலணைப்பிரதேசசபை, வேலணை எனும் இடத்திலிருந்து 2021.03.08ஆம் திகதியிலிருந்து 2021.03.22 வரை காலை 09.00 மணிக்கும் 14.30 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3,000.00 (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
07. கேள்விகள் இரு பிரதிகளில் (மூலப்பிரதி,பிரதி) தயாரிக்கப்பட்டு தலைவர், பிரதேச பெறுகைக்குழு, வேலணைப் பிரதேசசபை வேலணை எனும் முகவரிக்கு **2021.03.23 ஆம் திகதி பிற்பகல் 14.00 மணிக்கு முன்பதாக** கிடைக்ககூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்வி இலக்கம் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.கேள்விகோரல் பற்றியமுன் கூட்டிய கூட்டம் 2021.03.15 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு வேலணை பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் (வீதி) | வேண்டப்படும் கேள்விப் பிணை - பிணை வைப்பு (ரூ) - பிணை வைப்பு தொகை | வேண்டப்படும் கேள்விப் பிணை - பிணை வைப்பு (ரூ) - செல்லு படியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| **NP/14/41(18)/2/PSDG/2021/01** | மண்காடு வீதி திருத்தம் | **2.864 Mn** | **90** நாட்கள் | **C8 or C7** (பெருந்தெருக்கள்) | **28,700/=** | **27.06.2021** |

தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கோரப்படுகின்ற கேள்வியானது மதிப்பீட்டு தொகை 50 மில்லியனுக்கு குறைவானதாக இருப்பதனால் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA இனது தர முன்னுரிமை பொதுநிதி அறிக்கைகள் 4/2016(iii) உம் பொது நிதி அறிக்கை 3/2020 மற்றும் 3/2020(i) திகதிகள் முறையே 09.10.2020 மற்றும் 11.01.2021 பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**வேலணைபிரதேசசபை**
**வடமாகாணம்.**
**2021.03.08**


# இலங்கைப் பெண்ணுக்கு அமெரிக்காவில் விருது



கொழும்பு,மார்ச் 8

உலகில் தைரியம்மிக்க பெண்களைக் கௌரவிக்கும் வகையில் வழங்கப்படும் விருதுக்கு, இலங்கையின் சட்டத்தரணியும், மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான ரனிதா ஞானராஜா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளரால் வழங்கப்படும் இந்த விருது நாளை திங்கட்கிழமை காணொளி தொழில்நுட்பத்தினூடாக வழங்கப்படும்.

ரனிதா ஞானராஜா, அச்சுறுத்தல்கள் மற்றும் சவால்களுக்கு மத்தியில் நாட்டில் ஒதுக்கப்பட்ட மற்றும் பாதிப்புகளை எதிர்நோக்கும் சமூகங்களின் உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடியவர். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், நீண்ட காலமாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் ஆகியோருக்கு இலவச சட்ட உதவியை வழங்கியவர். நலிவுற்ற மக்களுக்கு நீதியையும், பொறுப்புக்கூறலையும் பெற்றுக்கொடுப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார் என்று அமெரிக்க இராஜாங்க திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

15 ஆவது ஆண்டாக இந்த விருது வழங்கப்படுகின்றது. இதுவரை 75 நாடுகளைச் சேர்ந்த 155 பெண்கள் இந்த விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# கிழக்கு முனையத்தில் தேசப்பற்றுடனும் மேற்கில் துரோகியாகவும் செயற்படாதீர்

## துறைமுக ஊழியர் சேவை சங்கம் தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 8**

**கிழக்கு முனைய விவகாரத்தில் தேசப்பற்றுள்ளவர்களாகவும், மேற்கு முனைய விவகாரத்தில் தேசத்துரோகிகளாகவும் செயற்படக் கூடாது என்று இலங்கை துறைமுக ஊழியர் சேவை சங்கத்தின் பொதுச்செயலாளர் நிரோஷன் கொரகாஹேன்ன தெரிவித்தார்.**

மேற்கு முனையத்தை துறைமுக அதிகார சபை முழுமையாக அபிவிருத்தி செய்வது குறித்து துறைமுக தொழிற்சங்கத்தினர் நாளை துறைமுக அதிகாரச சபைத் தலைவருடன் பேச்சை முன்னெடுக்கவுள்ளார்கள் என அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனையம் தொடர்பான திட்டத்தில் இலங்கை அரசு அதானி நிறுவனத்துடன் நேரடித் தொடர்பை கொண்டுள்ளது என்று இந்திய அரசு அறிவித்துள்ளது. மேற்கு முனைய அபிவிருத்தி குறித்து அதானி நிறுவனம் வழங்கிய யோசனையை கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் உறுதிப்படுத்தியது என்று இலங்கை அரசு வெளியிட்ட கருத்து பொய்யானது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. கொழும்புத் துறைமுக விவகாரத்தில் இந்திய அரசு தற்போது அதிக அக்கறை கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது.

இலங்கை அரசு இந்தியாவின் அதானி நிறுவனத்துடன் நேரடியாகத் தொடர்புகொண்டு செயற்படுவதை அறிய முடிகிறது. அரசில் உள்ள ஒரு தரப்பினர் அதானி நிறுவனத்துடன் கொண்டுள்ள தனிப்பட்ட உறவைப் பலப்படுத்த மேற்கு முனையத்தை தாரைவார்க்க முயற்சிக்கிறார்கள். மேற்கு முனைய விவகாரத்தில் அதானி நிறுவனம் இந்திய அரசைத் தவிர்த்து நேரடி யாக இலங்கையுடன் தொடர்பு கொள்வது அதிருப்தியளிக்கும் செயற்பாடாகும். கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை துறைமுக அதிகார சபை முழுமையாக தனித்து அபிவிருத்தி செய்ய முடியுமாயின், ஏன் மேற்கு முனையத்தையும் அபிவிருத்தி செய்ய முடியாது? கொழும்பு துறைமுகத்தின் ஏதாவதொரு முனையத்தை இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு வழங்கும் தனிப்பட்ட முயற்சியை ஆளும் தரப்பின் ஒரு சில உறுப்பினர்கள் முன்னெடுக்கின்றார்கள்.

இது நாட்டு மக்களுக்கு இழைக்கும் துரோகமாகும். கிழக்கு முனைய விவகாரத்தில் தேசப்பற்றுள்ளவர்களாகி, மேற்கு முனைய விவகாரத்தில் தேசத்துரோகிகளாக செயற்பட முடியாது என்றார். (ப)

# இலங்கைக்கு ஆதரவு என்ற நிலை வாக்கெடுப்பின் போது மாறலாம்

## வெளிவிவகார செயலர் ஊகம்

கொழும்பு, மார்ச் 8

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் உரை குறித்த விவாதத்தின் போது, இலங்கைக்கு ஆதரவாக பல நாடுகள் கருத்து வெளியிட்டன. ஆனால் வாக்கெடுப்பு என வரும்போது நிலைமை வேறுவிதமாகக் காணப்படலாம் என இலங்கையின் வெளிவிவகார செயலாளர் ஜயனத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

வலிமை வாய்ந்த நாடுகள் அச்சுறுத்துவதுடன், உறுப்பு நாடுகள் அவர்களுக்கு அச்சப்படும் நிலைமையை உருவாக்குவது வழமை. இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்காமல் இருப்பதற்காக நிதி மற்றும் கடன்களை வழங்குகிறோம் என அவர்கள் உறுதிவழங்கலாம்.

மேலும் இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்காமலிருந்தால் அந்த நாடுகளின் மனித உரிமை நிலைவரம் குறித்து, மௌனத்தைக் கடைபிடிக்கிறோம் என வலிமைவாய்ந்த நாடுகள் தெரிவிக்கலாம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை முற்றிலும் மேற்குலக அமைப்பு. ஒரு மேற்குலக நாடு கூட இலங்கைக்காக குரல் கொடுக்கவில்லை.

இலங்கைக்கு எதிராக குரல்கொடுத்த 15 நாடுகளில் சொலமன் தீவைத் தவிர ஏனைய அனைத்து நாடுகளும் மேற்குலக நாடுகள். சொலமன் தீவு அமெரிக்காவின் பழைய காலனி என்றார்.

(ப)

## கடந்த இரண்டு நாள்களில் 24 ஜனாஸாக்கள் அடக்கம் !

ஓட்டமாவடிப் பிரதேச செயலாளர் பிரிவில் கொரோனாத் தொற்று மூலம் உயிரிழந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் நேற்று மாலை வரை 24 ஜனாஸாக்கள் அடக்கம் செய்யப்பட்டன. கடந்த வெள்ளிக்கிழமை ஒன்பது ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டதுடன், கடந்த சனிக்கிழமை பதினொரு ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டன. நேற்று மாலை வரை 4 ஜனாஸாக்கள் அடக்கம் செய்யப்பட்டன என்று கொரோனாவால் உயிரிழக்கும் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யும் மையவாடியில் கடமையாற்றும் பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரிஎம். நஸீர் தெரிவித்தார். (ம-ற-150)

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 08 . 1943



மறைவு 07 . 03 . 2021

### திருமதி கமலேஸ்வரி கனகராசா

**(ஓய்வுபெற்ற ஆசிரியை, மண்டைதீவு மகா வித்தியாலயம்)**

மண்டைதீவு 6ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் 37, மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கமலேஸ்வரி கனகராசா அவர்கள் நேற்று (07.03.2021) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் மாணிக்கம் நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், திரு. கனகராசா (ஓய்வூதியர், யாழ் நீதி மன்றம்) அவர்களின் அன்பு மனைவியும், ரஜிகா, விஸ்னுகா ஆகியோரின் அன்புத் தாயாரும், வரதரராசன், சுகந்தன் ஆகியோரின் அன்பு மாமியும், சாருஜன், கேதுசன், கபிசன், வேணுசன் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், காலஞ்சென்றவர்களான மணிவாசகம், தவமணி மற்றும் விஜயலக்ஷ்மி, நடேசலிங்கம், வசந்தா, கனகராசா, சுந்தரர்ராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2021) திங்கட்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**37, மாட்டின் ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**கணவர், பிள்ளைகள், மருமக்கள்.**

## மரண அறிவித்தல்

மலர்வு 15 . 11 . 1944



உதிர்வு 07 . 03 . 2021

### குமாரசிங்கம் நாகேஸ்வரி

மானிப்பாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசிங்கம் நாகேஸ்வரி நேற்று (07.03.2021) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை அன்னமுத்து தம்பதியினரின் அன்பு மகளும், சங்கரத்தை வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், கந்தையா குமாரசிங்கத்தின் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ACI Ltd) பாசமிகு மனைவியும், ஆதவன் (IT விரிவுரையாளர் DMI), தாரணி (கனடா), ஆரணி (ஆசிரியர், ஏஞ்சல் சர்வதேச பாடசாலை, மானிப்பாய்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுகுணன் (கனடா), லதன் (பொதுச் சுகாதாரப் பரிசோதகர், சங்கானை) ஆகியோரின் அன்பு மாமியும், ஓவியா, விவேகன், அற்புதா ஆகியோரின் அன்பு மிக்க பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, இராசதுரை (விமானநிலைய கட்டுப்பாட்டாளர், கட்டுநாயக்கா - Airport Controller), செல்வரட்ணம், குமாரவேலு (நீர்ப்பாசன திணைக்களப் பொறியியலாளர்), சுப்பிரமணியம், அன்னம்மா மற்றும் திருமதி சிவசுப்பிரமணியம் அன்னலட்சுமி (கனடா), திருமதி வைத்திலிங்கம் சரஸ்வதி, திருமதி பரராசசிங்கம் மகேஸ்வரி, திருமதி கந்தசாமி குணமணி, செல்வி கணபதிப்பிள்ளை தவமணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அமரர் பொன்னம்மா, அமரர் மகேஸ்வரன் (இலங்கை போக்குவரத்துச் சபை முன்னாள் உத்தியோகத்தர்), திருமதி வீரபத்திரன் சந்தானலட்சுமி, தர்மலிங்கம் (ஓய்வுபெற்ற CDOA, நீர்பாசனத் திணைக்களம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (08.03.2021) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆஸ்பத்திரி ஒழுங்கை,**
**மானிப்பாய்.**
**மகன் ஆதவன் 077 591 5854 (மானிப்பாய்)**
**மகள் தாரணி +14168417117**
**மருமகன் லதன் 077 340 5973**
**மகள் ஆரணி 077 322 6570**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# கத்தி முனையில் நகைகள் கொள்ளை

## மூதாட்டிக்கு தேநீர் அருந்தக் கொடுத்து தானும் அருந்திச் சென்றான் கொள்ளையன்

யாழ்ப்பாணம், மார்ச் 8
யாழ்ப்பாணம் கந்தர்மடம் மணல்தறை ஒழுங்கையில் உள்ள ஓய்வுபெற்ற ஆசிரியர் வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையன், கத்தியைக் காட்டி அச்சுறுத்தி பல பவுண் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளான் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

வீட்டின் வெளிப்புறம் இருந்த மின் குமிழ்கள் அனைத்தையும் அகற்றிய பின்னர் கொள்ளையன் இரவு 10.30 மணியளவில் வீட்டினுள் உள்நுழைந்து ஆசிரியரின் கழுத்தில் கத்தியை வைத்து அச்சுறுத்தி, அவர் அணிந்திருந்த நகைகளைக் கொள்ளையடித்துள்ளான்.

தனிமை மற்றும் முதுமை காரணமாக பதற்றம் அடைந்த பெண், அபயக்குரல் எழுப்பவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. ஆசிரியை அணிந்திருந்த 3 பவுண் தங்கச் சங்கிலி, காப்பு, தோடு, மோதிரம் என்பனவே கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. இதே வேளை, நகைகளைக் கொள்ளையடித்த பின்னர், சுடுதண்ணீர் போத்தலில் இருந்த தேநீரை ஒரு குவளையில் எடுத்து ஆசிரியருக்கு வழங்கி அருந்த வைத்து, பின்னர் தானும் ஒரு குவளையில் தேனீரை எடுத்து அருந்திவிட்டே கொள்ளையன் சென்றுள்ளான் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-இ)

**ஓடு, கதவு விற்பனைக்கு**

ஓடு, கதவு, நிலை, யன்னல், கண்டகல் உடன் விற்பனைக்கு உண்டு.

**077 959 6844- பருத்தித்துறை**

### கேள்வி அறிவித்தல்
### வேலைத்திட்டங்கள் - 2021
### சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.

தலைவர், பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம், தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்குறிப்பிட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக கோரப்படுகின்றது.

01. தேசியபோட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

02 கேள்விதாரர்கள் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) நிர்மாணத்திற்கு கீழ்க் குறிப்பிடப்படும் தரத்தினை கொண்டிருப்பதோடு, பொது நிதிச் சுற்றறிக்கை இல.04/2016(ii) இற்கு அமைவாக இவ் விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) பெயர் இடம் பெறாதவராயும் இருத்தல் வேண்டும்.

03 தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

04 ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர்/ செயலாளர் சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் (தொலைபேசி : 021-2050348, 0212050356 தொலைநகல் : 021-2050348 இல் இருந்து மேலதிக த்கவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணிமுதல் 14.00 மணிவரை 08-03-2021 – 22-03-2021 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

05 ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் தவிசாளர்/செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் எனும் இடத்திலிருந்து 08-03-2021 ஆம் திகதியிலிருந்து 22-03-2021 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2,000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

06 ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனி உறைகளிட்டு தவிசாளர்/ செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் எனும் முகவரிக்கு 22-03-.2021 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

07 கேள்விப் பிணையானது கேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77 நாட்கள் **(07.06.2021)** வரையும் செல்லுபடியாகும்.

08 கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ. இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (Without Vat) (ரு) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| 1 | NP/14/41 (6)/2/C.F/ 2020/01 | சோலர் (Solar) கொள்வனவு – தலைமை அலுவலகம் | 3.00 | 60 நாட்கள் | அங்கீகரிக் கப்பட்ட நிறுவனம் | 30,000.00 | 05.07.2021 |
| 2 | NP/14/41 (6)/2/C.F/ 2020/02 | வளிச்சீராக்கி (Air Conditioner) பொருத்துதல்– தலைமை அலுவலகம் | 1.21 | 60 நாட்கள் | அங்கீகரிக்க ப்பட்ட நிறுவனம் | 13,000.00 | 05.07.2021 |
| 3 | NP/14/41 (6)/2/PSD G/ 2021/01 | மிருசுவில் அ.த.க.பாடசாலை வீதி நிர்மாணம் | 3.06 | 60 நாட்கள் | C8/C7 வீதி நிர்மானம் | 31,000.00 | 05.07.2021 |
| 4. | NP/14/41 (6)/2/CBG / 2021/01 | ஊரியான் வீதி புனரமைப்பு - கைதடி | 5.83 | 90 நாட்கள் | C7/C6 வீதி நிர்மானம் | 58,000.00 | 05.07.2021 |
| 5 | NP/14/41 (6)/2/CBG / 2021/01 | செங்கத்திடல் வீதி நிர்மாணம் - நாவற்குழி. | 5.43 | 90 நாட்கள் | C7/C6 வீதி நிர்மானம் | 54,500.00 | 05.07.2021 |
| 6 | NP/14/41 (6)/2/Prov incial Fund/ 2021/01 | குடியிருப்பு வீதி புனரமைப்பு - மந்துவில் | 8.92 | 90 நாட்கள் | C7/C6 வீதி நிர்மானம் | 89,500.00 | 05.07.2021 |

09 கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 15.03.2021 திகதி மாலை 14.30 மணிக்கு பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

தலைவர்
பெறுகைக்குழு,
சாவகச்சேரிபிரதேச சபை,
கொடிகாமம்.
08.03.2021

## இரணைதீவில்...

தேவாலயங்களில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

'எம் வாழ்விடத்தை சவக்காலை ஆக்காதே!, இரணைதீவு மக்களின் நல்வாழ்வை சிதைக்காதே!, மத நல்லிணக்கத்தை சிதைக்காதே! போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் ஏந்தியிருந்தனர்.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம் மறைமாவட்ட கத்தோலிக்க தேவாலயங்களிலும் கவனவீர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் மரியன்னை பேராலயத்தில் காலை 6.30 மணியளவில் மக்கள் ஒன்றுகூடி தமது எதிர்ப்பை வெளியிட்டனர். யாழ்ப்பாணம் பொஸ்கோ புனித திரேசா தேவாலயத்தில் எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சாவகச்சேரி கத்தோலிக்க பங்கைச் சேர்ந்த மக்கள் நேற்றைய வழிபாட்டின் பின்னர் பங்குத்தந்தை அருட்பணி ஞானரூபன் அடிகள் தலைமையில் புனித லிகோரியார் ஆலயத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். 'கத்தோலிக்க மக்கள் வாழும் இரணைதீவில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் சடலங்களை அடக்கம் செய்ய அரசு எடுத்த தீர்மானத்தை கைவிடவேண்டும். எமது எதிர்ப்பு முஸ்லிம் மக்களுக்கானது அல்ல. இஸ்லாமியரும் கத்தோலிக்கர்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றோம். எனவே மக்களின் கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்க்க வேண்டும்' இவ்வாறு யாழ்ப்பாண மறைமாவட்ட குருமுதல்வர் தெரிவித்தார்.

**முல்லைத்தீவு**

கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்யும் இடமாக கிளிநொச்சி இரணைதீவை தெரிவு செய்தமைக்கு எதிராக முல்லைத்தீவு மக்களும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். முல்லைத்தீவு செல்வபுரம் புனித யூதா ஆலயம் மற்றும் இராயப்பர் தேவாலயங்களில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்ற வழிபாட்டைத் தொடர்ந்து மக்கள் தமது எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். (ஐ-ச,20,19,9)

## வடக்கில்...

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று 413 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போதே அவர்களில் 6 பேருக்கு கோரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. யாழ்ப்பாணம் மாநகர பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் மல்லாவியில் இடம்பெற்ற இறுதிச் சடங்கில் பங்குபற்றித் திரும்பிய நிலையில், சுயதனிமைப்படுத்தப்பட்டவர். மற்றையவர் கொழும்பு சென்று திரும்பிய நிலையில் கொரோனாத் தொற்று அறிகுறிகளுடன் காணப்பட்டதால் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்ட நிலையில் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கைதி ஒருவருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஆசிரியை ஒருவருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர் நவாலியில் தொற்றுக்குள்ளான ஆசிரியையுடன் தொடர்புடையவர் என்று சுகாதாரப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ம-26)

முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**அவசரம் !**
**0+ சிறுநீரகம் தேவை**
யாராவது (ஆண்/பெண்) நன்கொடை அளிக்க விரும்பினால் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்.
**076 8989 356, 077 110 2816**



**மொறாயஸ் பல் மூக்குக் கண்ணாடியகம்**

1962ஆம் ஆண்டு தொடங்கி யாழ் வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கி வந்த மொறாயஸ் (Morais) மூக்கு கண்ணாடியகம் தற்போது இல 516,யாழ் போதனா வைத்தியசாலை முன்பாக இயங்கி வருகின்றது. வாசிப்பதற்குரிய கண்ணாடி (Reading only glasses) ரூபா நானூற்றி ஐம்பது (450) இற்கு வழங்கப்படும். கண் பரிசோதனை இலவசமாக பரிசோதிக் கப்பட்டு குறைந்த விலையில் (3500) இரு பார்வைக் கண்ணாடி வழங்கப்படும்.

**பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை உண்டு.**

**இல. 516, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**077 484 5379**

## ஈஸ்டர்...

பாதிக்கப்பட்ட மக்களுக்காகச் செய்ய வேண்டிய பெரும் பொறுப்பாகும். தாக்குதல் குறித்துப் பேராயருக்கு இருக்கும் வேதனை நியாயமானது. அவர் அதைப் பற்றி பேசுவது சரியானது. தாக்குதல் நடந்த நேரத்தில் அமைதியாக இருந்த அப் போதைய அரசின் அரசியல்வாதிகள் இப்போது கறுப்புக் கொடிகளை ஏற்றுவது கேலிக்குரியதாகும். இவ்வாறு ஜனாதி பதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்டத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற 'கிராமத்துடன் உரை யாடல்' நிகழ்ச்சியில் பங்கேற்றபோதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார் என்று அவரது ஊடகப் பிரிவு தெரிவித்துள் ளது.

'உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர் பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை மறைக்க எனது அரசுக்கு எந்தவிதமான தேவையும் இல்லை. அது சம்பந்தமாக எந்தவொரு நபரு டனோ அல்லது தரப்பினருடனோ உடன் பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளவோ எவரையும் மகிழ்விக்கவோ வேண்டிய தேவையும் இல்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் முன்னைய அரசு ஆட்சியில் இருந்தபோது, 2019ஆம் ஆண்டு இடம்பெற்றது. அப்போதைய அரசின் தவறான கொள்கைகளால் ஏமாற்றமடைந்த மக்கள், கூட்டுறவு சங்கத் தேர்தல்களிலும், 2018ஆம் ஆண்டு பெப்ரவரியில் நடந்த உள்ளூராட்சித் தேர் தல்களிலும் அரசுக்கு தங்கள் கடுமையான எதிர்ப்பை வெளிப் படுத்தினர்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலைக் காட்டி நான் ஆட்சிக்கு வர வில்லை. 2015ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்த அரசு தேசிய பாதுகாப்புக்கு அதிக முன்னுரிமை அளித்தது. 2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தவர்கள் தேசிய பாதுகாப்பை மறந்து விட்டார்கள். எத்தகைய மனித உரிமை குற்றச்சாட்டுகள் எழுப் பப்பட்டாலும், 2015ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த பாதுகாப்பு கொள்கை மீண்டும் செயற்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அரசே பொறுப்பு. தமிழ் பிரிவி னைவாத பயங்கரவாதத்துக்கோ அல்லது இஸ்லாமிய தீவிரவாதத்துக்கோ எந்த வகையிலும் இடமளிக்கப்படமாட் டாது. அடிப்படையற்ற அனைத்து குற்றச்சாட்டுகளையும் முற் றாக நிராகரிக்கின்றேன்' இவ்வாறு ஜனாதிபதிதெரிவித்தார் என்றுள்ளது. (ம-ஒ,இ)

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**
TVS Wego மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. (BFR)
**077 8989691 யாழ்ப்பாணம்**

## முன்னணியின்...

யாழ். மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாநகர சபையை கலைக்கும் முயற்சி பெரும் செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. மாநகர சபை முதல்வராகிய எனதுபதவி மற்றும் ஆதரவான உறுப்பினர்களது பதவிகளைப் பறிப்பதன் மூலம் மாநகர சபையை கலைக்கின்ற செயற்பாடு நடைபெறுகிறது.

மாநகர சபை முதல்வர் பதவியை நான் இழக்கின்ற சந்தர்ப்பத்தில் மாநகரசபை கலையும். இது ராஜபக்ச தரப்பு விரும் பிய அல்லது அவர்களது நிகழ்ச்சி நிரல். அவர்கள் விரும்புகின்ற செயற் பாடும் அதுவே.

யாழ்ப்பாண பண்பாட்டு மையத்தை பொறுப்பெடுக்கும் முயற்சியில் அவர் கள் ஈடுபடுகின்ற போது அதற்குத் தடை யாக நாங்கள் இருக்கின்றமையால் ராஜபக்ச தரப்பு கோடிக்கணக்கான பணத்தை செலவழித்து எங்களை பதவியில் இருந்து அகற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது.

குறிப்பாக என்னை மாநகர சபை உறுப்பினர் பதவியில் இருந்து விலக்குவதற்காக, வழக்குகளில் ஈடு பட்டு வருகின்றனர். இந்த செயற்பாடு களுக்கு எதிராக நாங்கள் கடுமையா கப் போராடி வருகின்றோம்.

கிட்டத்தட்ட ஐம்பது லட்சத்துக்கும் மேல் வழக்கு நடவடிக்கைகளுக்காக இது வரை செலவு செய்துள்ளார்கள். இவ் வாறு யாழ். மாநகர சபையைக் கலைப் பதன் ஊடாக அதனை தங்களது நேரடியான ஆளுகைக்குள் கையகப் படுத்தி மாநகர சபையின் பெரும் சொத் தாக கருதப்படுகின்ற யாழ். பண்பாட்டு மையத்தை தங்களுடைய கட்டுப்பாட் டுக்குள் எடுப்பதற்கு முயற்சித்து வரு கின்றார்கள்.

அவர்களின் இந்த முயற்சிக்கு யாழ். மாநகர சபை தடையாக இருக்கின்ற காரணத்தால் ராஜபக்ச தரப்பினர் எங் களை பதவியில் இருந்து அகற்றுவதற் காக பெரும் எடுப்பிலே பணத்தை செலவழிக்கின்றார்கள் என்று நான் கருதுகின்றேன்.

குறித்த வழக்கை நடத்துவதற்கு சிலரை வைத்துள்ளார்கள். எங்களுடைய கட்சியில் உள்ள அவர்களுக்கு விசுவா ச மாக இருக்கின்ற, அவர்களுடைய நிகழ்ச்சி நிரலை ஏற்றுக்கொண்டு துர திஸ்டவசமாக இனத்தை அழிப்பதற் கான அல்லது இனத்தைப் பிளவு படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடும் சில நபர்கள் ஊடாகவே இதனைச் செய் கின்றார்கள். 2019ஆம் ஆண்டிலே ராஜபக்சதரப்பு வெல்ல வேண்டுமென்று துடித்தவர்கள் இதனைச் செய்கின்றார் கள் - என்றார். (ம-ப-26,319,20)

## கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

## மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை-2021

01 வலிகாமம் வடக்கு பிரதேசசபை **மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை** கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02 தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03 **தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) வடமாகாணம்,** தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வீதிபுனரமைப்பு, கட்டட வேலைகளுக்கு கோருகின்றார்.

04 கேள்விதாரர்கள் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன்,(பொது நிதிச் சுற்றறிக்கை இல.04/2016(ii)) வீதிபுனரமைப்பு ,கட்டட நிர்மாண அமைப்பிற்கு பொருத்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினைப் பதிவு செய்தவராகவும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயும் இருத்தல் வேண்டும்.

05 தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை(Schedule) பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.

06 ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)** தொலைபேசி:- 0212241130, தொலைநகல்:- 0212243688 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் 08.03.2021 ஆம் திகதியிலிருந்து 22.03.2021 வரைகாலை 09.00 மணிமுதல் 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

07 ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை எனும் இடத்திலிருந்து 08.03.2021 ஆம் திகதியிலிருந்து 22.03.2021 வரை காலை 9.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08 கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர் பெறுகைக்குழு ,வலிகாமம் வடக்குபிரதேச சபை, காங்கேசன்துறை எனும் முகவரிக்கு 22.03.2021 ஆம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் /பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09 கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழேஅட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாவில்) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து கேள்வி கேள்வி செல்லுடியாகும் காலம் | | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | செல்லு படியாகும் நாட்கள் | திகதி | பிணை வைப்பு | செல்லு படியாகும் காலம் |
| 1 | NP/14/41(14)/ 05/01/104/PSD G/2021 | மீன்சந்தை அமைத்தல்- இறால்மடம் (அளவெட்டி) | 2.97 | 90 நாட்கள் | C7/C8 கட்டட நிர்மாணம் | 63 நாட்கள் | 22.05.2021 | 30,000.000 | 21.06.2021 |
| 2 | NP/14/41(14) /05/01/109/PS DG/2021 | பலாலி தெற்கு- வசாவிளான் இந்து மயானத்தில் எரிகொட்டகையும் தங்குமிடமும் அமைத்தல் | 1.74 | 90 நாட்கள் | C8/C9 கட்டட கட்டட நிர்மாணம் | 63 நாட்கள் | 22.05.2021 | 18,000.00 | 21.06.2021 |
| 3. | NP/14/41(14) /05/01/110/PS DG/02/2021 | சென் பிலிப் மேரியர் தேவாலய வீதி புனரமைப்பு - இளவாலை | 1.46 | 60 நாட்கள் | C8/C9 வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 22.05.2021 | 15,000.00 | 21.06.2021 |
| 4. | NP/14/41(14) /05/01/111/PS DG/02/2021 | இளவாலை நாதோலை (உள்ளக) வீதி புனரமைப்பு | 3.50 | 90 நாட்கள் | C7/C8 வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 22.05.2021 | 36,000.00 | 21.06.2021 |

10. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 15.03.2021 ஆம் திகதி பி.ப.14.30 மணிக்கு வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.


திரு.சோ.சுகிர்தன்
தலைவர்,
உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,
வலிகாமம் வடக்குபிரதேச சபை,
காங்கேசன்துறை
08.03.2021

## நெஞ்சகலா ஈராண்டு நினைவலைகள்

### அமரர் கணபதிப்பிள்ளை மாணிக்கம்

### A.V.K மாணிக்கம்

மண்ணில் 28 . 12 . 1946



விண்ணில் 01 . 03 . 2019

திதி: அபரபக்க தசமி (08.03.2021 திங்கட்கிழமை)

காலனவன் வஞ்சித்து ஈராண்டு கடந்ததப்பா
ஆறாத்துயரில் நாங்களின்றும்
வாழ்வின் ஒளிவிளக்காய் இருந்தாயே, குழந்தைகளை
விரல்பிடித்து வளர்த்தாயே
விறகெரித்து அனுப்பிவிட்டோம்– உனை
வேதனையில் துடிக்கிறது நெஞ்சமின்னும்
ஏழு தசாப்பதங்கள் எம்முடன் வாழ்ந்த உனை
காலனவன் வென்றுவிட்டான், கல்லறைக்கு அனுப்பிவிட்டான்
என்றும் எம் மனவானில் என்றும்
விடிவெள்ளியாய் வீற்றிருப்பீர்கள்
இறைவனே! உன்னடியில் சுகமாய் இளைப்பாறும் எம் தந்தையை.

சுனேதாலயம்
வல்லை வீதி,
அச்சுவேலி.

வலிசுமக்கும் நெஞ்சுடன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



முன்னாள் ஆசிரியை யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் ஆசிரியர் சங்க ஐக்கிய இராச்சிய கிளையை
ஆரம்பித்தவர்களில் ஒருவருமாகிய

### சரஸ்வதி பொன்னம்பலம்

யாழ். சாவகச்சேரி சங்கத்தானை தாமோதரம்பிள்ளை வீதியைப் பிறப்பிடமாகவும், லண்டன் Harrow ஐ வதிவிடமாகவும் கொண்ட சரஸ்வதி பொன்னம்பலம் அவர்கள் 02-03-2021 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான செல்லையா பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், செல்லையா செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னம்பலம் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற விஜயராஜன் அவர்களின் பாசமிகு தாயாரும், சிறிரஞ்சினி அவர்களின் அன்பு மாமியாரும், இராசலட்சுமி, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சனன், நிறோன், சாரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

இவரது இறுதி நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிரித்தானியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:-
அகிலன் - பெறாமகன்
Mobile : +447885752112

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### நாகலிங்கம் பொன்னுத்துரை

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், அராலி வீதி சங்கானையை வசிப்பிடமாகவும், வண்ணார்பண்ணையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திரு.நாகலிங்கம் பொன்னுத்துரை அவர்கள் நேற்று (07.03.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் வள்ளியம்மை தம்பதிகளின் புதல்வனும், பாலாம்பிகையின் கணவரும், காலஞ்சென்ற நவரத்தினம் சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தம், திருச்செல்வம் மற்றும் தோகமல்லிகா, முகுந்தன் (லண்டன்), நீதிராசா ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்றவர்களான இராசையா, சுப்பிரமணியம், நல்லம்மா, தம்பிராசா, தியாகராசா, தங்கராசா, தர்மலிங்கம் மற்றும் வைத்திலிங்கம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நாகநாதன், மங்கயர்க்கரசி, பரமநாதன், சிவம், ராமநாதன் மற்றும் மார்கண்டு (மலேசியா), சிவநேசம், வல்லிபுரம் ஆகியோரின் மைத்துனரும், புஸ்பராணி, ஈஸ்வரி, விக்கினேஸ்வரதாஸ், குழலினி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், ரவீந்திரன், நிமலன், ரமேஸ்குமார், அரவிந்தன், அனுஜா, சிவானி, நிரோஜதாஸ், பவிந்தன் (லண்டன்), கார்த்திகாயினி (லண்டன்), சுகிதா, குஜிதா, நிஷாந்தன், சுதர்ஸ் ஆகியோரின் பேரனும், மிதுஷன், ரிஷான், அஸ்வின், அபிநயா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29/7, சேர்ச் லேன், வண்ணார்பண்ணையில் அமைந்துள்ளஇல்லத்தில் இன்று (08.03.2021) திங்கட்கிழமை காலை நடைபெற்று தகனக்கிரியைக்காக காலை 9.00 மணிக்கு யாழ் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

29/7, சேர்ச் லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 473 3893

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 - 06 - 1952



மறைவு 07 - 03 - 2021

### கந்தையா நபிநேகநவயுகன் (நவம்)

இல.10, பொன்னம்பலம் வீதி, அரியாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நபிநேகநவயுகன் (நவம்) நேற்று (07.03.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா கோகில இலட்சுமியின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற நவரெத்தினம் செல்லம்மா ஆகியோரின் பாசமிகு மருமகனும் கோகிலராணியின் அன்புக்கணவரும், நந்தசீலன், கஜந்தினி, சேறூபி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுந்தரலிங்கத்தின் (பொன்னுச்செல்வம்) அன்புச் சகோதரனும், தர்சினியின் மைத்துனரும், காலஞ்சென்ற கோகிலதாசனின் மைத்துனரும், திவாகரன், திவ்யா, தர்மேந்திரன் (யாழ் போதனா வைத்திய சாலை) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான சறோஜினிதேவி, செல்வரத்தினம், செல்லத்துரை மற்றும் சுப்பிரமணியம், பரஞ்சோதி ஆகியோரின் மருமகனும், சௌதமி, சுபாஸ்கினி, கீர்த்திசன் ஆகியோரின் பெரிய-தந்தையும், அனோஜன், லக்ஷ்மன், வர்ணன், வர்சனா, அஸ்வின், அஸ்விதா, அஸ்மிகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2021) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்

## குற்றவியல்...

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் மற்றும் உறுப்பு நாடுகள் ஆகிய தரப்புகளுக்கு மேற்படி நீதிபதிகள் கடிதம் அனுப்பியுள்ளனர். அந்தக் கடிதத்தில் ஐந்து விடயங்களை அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஈழத் தமிழர்களின் நீதிகோரிய பயணத்தில் இந்திய உயர் நீதிமன்ற நீதிபதிகள் கைச்சாத்திட்டு இவ்வாறான மனு ஒன்றை அனுப்பிவைத்திருப்பது இது தான் வரலாற்றில் முதல் தடவையாகும். தமிழ் மக்களின் நீதிக்கான பயணத்தில் நீதிபதிகளின் இந்த நடவடிக்கை புதிய நம்பிக்கையைத் தரும் என்று அனைத்துலக நீதிக்கான தளங்களில் பணியாற்றும் ஆளுமையாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். நீதிபதிகள் அனுப்பிவைத்துள்ள மனுவில் பின்வரும் 5 கோரிக்கைகள் உள்ளடங்கியுள்ளன.

1. இலங்கை அரசை ஐ.நா. பாதுகாப்புச் சபை ஊடாக அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும்.
2. இலங்கை அரசால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழீழத்தில் மீண்டும் மிகப்பெரும் அழிவுகள் ஏற்படா வண்ணம் ஈழத் தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வை வழங்க வேண்டும்.
3. தமிழீழத்தில் இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டமைப்புசார் தமிழின அழிப்பு குறித்தும், ஐ.நா. மனித உரிமைகள் சபை அறிக்கைகளைத் தயாரித்து சர்வதேச அரசியல் தளங்கள் மற்றும் சர்வதேச நீதி மன்றங்களில் கையளிக்க வேண்டும்.
4. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் பிரிவு 4 இன் கீழ் இலங்கைக்கான சிறப்பு அறிக்கையாளர் ஒருவரை நியமிக்க வேண்டும்.
5. இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சிறப்பு கூட்டத் தொடர் ஒன்றை நடத்த வேண்டும்.

நீதிபதி கே.பி.சிவசுப்பிரமணியம், நீதிபதி ஏ.கே.ராஜன், நீதிபதி அரிபரந்தாமன், நீதிபதி அக்பர் அலி மற்றும் நீதிபதி சி.ரி.செல்வம் ஆகிய ஐந்து நீதிபதிகளே இலங்கையை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தியவர்கள் ஆவர். (ம)

## தடுப்பூசி...

வின் சீரம் நிறுவனம் இலங்கைக்கு தெரிவித்துள்ளது.

சீரம் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஆதார் சி.பூனவல்லா கடந்த 3ஆம் திகதி, இலங்கை அரச மருந்தக் கூட்டுத் தாபனத்துக்கு அனுப்பிய கடிதத்தில், இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது:

கூடுதல் விநியோக கடமைகளைப் பூர்த்தி செய்ய, எங்கள் உற்பத்தி வசதிகளின் விரிவாக்கத்தை நாங்கள் தொடங்கினோம். எனினும் எங்கள் கட்டடங்களில் ஒன்றில் ஏற்பட்ட தீ எங்கள் மாதாந்த உற்பத்தியின் விரிவாக்கத்துக்கு தடைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த சூழ்நிலைகளின் காரணமாக உங்களுக்கான வழங்கல் தொடர்பில் எதிர் வரும் மாதங்களில் உத்தரவாதம் அளிக்க முடியாது. இது உங்களுக்கு எதிர்காலத்தில் தடுப்பூசிகளை வழங்குவதற்கான திறனைப் பாதிக்கும் - என்றுள்ளது.

இலங்கை சீரம் நிறுவனத்திடம் 1.5 மில்லியன் தடுப்பூசி டோஸுக்கு 5.25 மில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலுத்தியுள்ளது. இதில் 5 லட்சம் டோஸ் கடந்த பெப்ரவரி இறுதி வாரத்தில் சமூக தடுப்பூசி திட்டத்துக்காக பெறப்பட்டது. மீதமுள்ள ஒரு மில்லியன் டோஸ் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் இலங்கைக்கு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந் நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. (ஒ,ப,இ)

## கூட்டமைப்பிலிருந்து...

மைப்பிலிருந்து விலக வேண்டும் என வலியுறுத்தினார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான கஜேந்திரகுமார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மனித உரிமைகள் சபையில் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆற்றிய உரைக்கு பதில் அளிக்கும் வகையில், சம்பந்தன் ஊடகங்களுக்கு வழங்கிய அறிக்கையானது தமது பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்படவில்லை என்று பங்காளிக் கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன. பங்காளிக் கட்சிகளின் தலைவர்களின் கையொப்பத்துடன் குறித்த அறிக்கை சமர்ப்பிக்கபட்டதாக இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் பங்காளிக் கட்சிகள் தமக்கு அந்த அறிக்கை காட்டப்படவில்லை என்று குறிப்பிடுகின்றன. இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசியல் மோசடி செய்கின்ற வகையில் அவர்களுடைய கையொப்பத்தை பொய்யாக சேர்த்து உண்மைக்கு மாறாக அறிக்கையை விட்டிருக்கின்றார்கள் என்றால் அவர்கள் அதை ஒரு அடிப்படைப் பிரச்சினை யாக பார்த்து கூட்டமைப்பில் இருந்து வெளியேற வேண்டும்.

தமிழ் மக்கள் இன்று எதிர்பார்க்கின்ற இரண்டு விடயங்களில் ஒன்று அரசியல் தீர்வு மற்றையது பொறுப்புக்கூறல். இந்த இரண்டிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமை, பங்காளிக் கட்சிகளின் பெயரைப் பாவித்து தமிழ் மக்களின் முதுகில் குத்தியுள்ளது. ஆகவே கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் இந்த விடயத்தில் ஆழமான முடிவொன்றை எடுக்க வேண்டும் -என்றார். (ம-319,26)

## கோத்தாபய...

வகையிலும் ஐ.நா. விடம் நீதிகோரி வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தற்போது போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். ஐ.நா. சபையோ அல்லது சர்வதேச நாடுகளோ தமிழர்களுக்கு ஒருபோதும் தீர்வு வழங்காது. எனவே, தேவையற்ற போராட்டங்களைத் தமிழ் மக்கள் உடனே நிறுத்த வேண்டும் இவ்வாறு கோத்தாபய அரசின் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடர் தற்போது ஜெனிவாவில் நடைபெற்று வருகின்றது. இந்தநிலையில், தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு சர்வதேசத்திடம் நீதி கோரி வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் அடையாள உண்ணாவிரதப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே அமைச்சர் கெஹலிய மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'போரின்போது தமிழ் மக்களுக்கு அநீதிகள் இடம்பெற்றிருந்தால் அதற்கான தீர்வுகளை அரசுதான் வழங்கும். அதை விடுத்து நாட்டின் சட்ட திட்டங்களை மீறி ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடம் தமிழ் மக்கள் நீதியை எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது. தமிழ் மக்களின் இந்தப் போராட்டங்களின் பின்னணியில் தமிழ் அரசியல்வாதிகளும் புலம்பெயர் அமைப்பினரும் செயற்படுகின்றனர். இரு தரப்பினரும் தங்களின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப தமிழ் மக்களைப் பகடைக்காய்கள் ஆக்குகின்றனர். அரசின் பொறுமையைச் சோதிக்கும் வகையில் தேவையற்ற போராட்டங்களை முன்னெடுப்பதைத் தமிழ் மக்கள் உடன் நிறுத்த வேண்டும்' என்றார். (ம-22)

## ஐ.நாவின்...

டுள்ள இலங்கை குறித்த பிரேரணையின் புதுப்பிக்கப்பட்ட வரைபு வெளியாகியுள்ளது. இலங்கைக்கு எதிரான இந்தப் பிரேரணையை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்புரிமை நாடுகள் தோல்வியடையச் செய்ய வேண்டும் இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

புதிய நகல் வரைவில், இலங்கையில் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் அதிகளவுக்கு ஓரங்கட்டப்படுவது, சிவில் சமூகத்தினர் கண்காணிக்கப்படுவது அச்சுறுத்தப்படுவது, ஊடக சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகள், போரால் உயிரிழந்தவர்களைப் பொதுமக்கள் நினைவுகூருவது மீதான கட்டுப்பாடுகள் மற்றும் நினைவுத் தூபிகள் அழிக்கப்படுதல் குறித்த கரிசனைகள் ஆகியவை புதிதாக இடம்பெற்றுள்ளன. இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர வீரசேகர மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை மீது சர்வதேச விசாரணைப் பொறிமுறையை திணிக்க முடியாது என்பதை பிரிட்டன் உள்ளிட்ட பிரேரணைக்குச் சொந்தமான நாடுகள் புரிந்துகொண்டுள்ளன.

எனினும், குறித்த நாடுகள் இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் புத்துயிர் ஊட்டும் வகையில் பரிந்துரைகளை முன்வைத்துள்ளன. போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதும் நினைவுத்தூபிகளை நிறுவுதலும் விடுதலைப்புலி களை நினைவுகூருவதற்கு ஒப்பானது.

வடக்கு, கிழக்கில் விடுதலைப்புலிகளை நினைவேந்தியே மே, நவம்பர் மாதங்களில் பகிரங்க நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. நினைவுத் தூபிகளும் அவர்களுக்காகவே நிறுவப்படுகின்றன. இவையெல்லாம் எமது புதிய ஆட்சியில் இடம் அனுமதி இல்லை என்றார். (ஓ.5.22)

## படையினரின்...

டான சர்வதேசத்தின் பொறுப்புக்கூறலைப் பூர்த்திசெய்யவில்லை - என்று அறிக்கையிட்டுள்ளது பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் பேரெழுச்சி இயக்கம்.

இது தொடர்பில் அந்த அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாவது:

நிலைவரத்தின் தீவிரத்தன்மையின் காரணமாக, இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்த வேண்டியமையை வலியுறுத்தி, ஒரு மாதத்துக்கு முன்னர் 2021ஆம் ஆண்டு தை மாதம் 15ஆம் திகதியன்று தமிழர்கள் ஒன்றிணைந்து தங்களுக்கு ஓர் கடிதத்தை அனுப்பியிருந்தோம். இந்த அழைப்பானது அண்மையில் வடக்குகிழக்கு சிவில் சமூக அமைப்புக்களால் ஒழுங்குசெய்யப்பட்டு ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பங்குபற்றிய 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை' என்ற பேரணியின் மூலமாக வலுச்சேர்க்கப்பட்டிருந்தது.

போர்க் குற்றங்கள், மனித நேயத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்தால் தமிழ் மக்களுக்கு எதிராகப் புரியப்பட்டுள்ள இனப்படுகொலை ஆகியவற்றின் பொருட்டு நீதியைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் எந்தவொரு நம்பிக்கையையும் நாம் இழந்துள்ளமையினாலேயே இவ் வேண்டுகோளை நாம் விசேடமாக தங்களிடம் வலியுறுத்திக் கோரியிருந்தோம்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தாமல் விடுதலானது கொடூரமான குற்றங்களைப் புரிந்தோர் நீதியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு வழிகோலுவதுடன் மாத்திரமல்லாது, அது இலங்கையின் அரசியல் தலைவர்களும் பாதுகாப்புப் படைப் பிரதானிகளும் தாம் நீதிக்கு முகங்கொடுக்கத் தேவையில்லை என்பதை நன்கறிந்து எதுவிதத் தயக்கமும் இல்லாமல் தமிழ் மக்களுக்கு எதிரான சர்வதேசக் குற்றங்களைப் புரிவதற்கான துணிச்சலையும் ஏற்படுத்திவிடும். எனவே இலங்கையானது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தாமல் விடப்படின் தமிழ் மக்கள் எதிர்கொள்ளவல்ல இந்த அபாயத்தைத் தீவிரமாகக் கவனத்தில் கொள்ளுமாறு நாம் தங்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

இலங்கையானது தனது நீதித்துறை நிறுவனங்களை அதனூடைய பாதிப்புற்றோருக்காக செயற்பட முடியாதவையாக ஆக்கியுள்ளது என்பதே கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். எனவே, சர்வதேச அல்லது வெளிப்புற நியாயாதிக்கத்தினூடாக நீதியை நிலைநாட்டுவதன் பொருட்டு பாதிப்புற்றோருக்கும் அவர்களுடைய பிரதிநிதிகளுக்குமாகப் பணியாற்றுவதற்காக உயர் ஆணையாளரின் பரிந்துரைகளை நாம் மீள வலியுறுத்துகிறோம். சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ஐ.சி.சி.) போன்ற பொறுப்புக்கூறலுக்கான வர்வதேச வழிவகைகள் கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும் - என்றுள்ளது. (ம)

## கடலில்...

நால்வர் முல்லைத்தீவு நாயாற்றுப் பகுதியில் உள்ள கடலில் நேற்றுக் குளிக்கச் சென்றுள்ளனர். கடலில் குளித்துக்கொண்டிருந்த போது நண்பகல் 12.30 மணியளவில் நால்வரில் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

நீண்ட நேரம் தேடுதல் நடத்தப்பட்ட நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டார். கருணாரத்தினம் ஜெசாந்தன் (வயது 26) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். (ம-113)

# இராணுவத்திடம் தோட்டத்தை ஒப்படைப்பது பூதாகரமானது!

## இராதாகிருஸ்ணன் எம்.பி தெரிவிப்பு



**நுவரெலியா, மார்ச் 8**

**மலையகப் பெருந்தோட்ட நிர்வாகங்களை இராணுவத்தினர் வசம் கொண்டு வருவதற்கான முயற்சிகளை அனுமதிக்கப் போவதில்லை இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது, 'சம்பள நிர்ணய சபை ஆயிரம் ரூபா விடயத்தில் தலையிட்டதால், தோட்டத்துரைமார், தொழிலாளர்களுக்கு எதிராக நேற்றுமுன்தினம் போராட்டம் நடத்தும் சூழல் உருவாகியுள்ளது. ஹோல்டன் மற்றும் கந்தப்பளைத் தோட்டங்களில் ஏற்பட்டுள்ள சம்பவங்கள் தோட்டத்துரைமார் வீதியில் இறங்கி போராடும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. இதன் பிரதிபலிப்பாக தற்போது ஹய்போரஸ்ட் மாகுடுகல தோட்டத்தில் 6 இராணுவ வீரர்கள் தோட்ட நிர்வாகத்தை பொறுப்பேற்க தயாராகுகின்றனர் என அறிய முடிகின்றது. இது குறித்து மகுடுகல தோட்ட நிர்வாகத்திடம் கேட்டபோது அவர்கள் தமக்கு இது குறித்து தெரியாது என்கின்றனர். இவ்வாறு இராணுவத்திடம் தோட்ட நிர்வாகத்தை ஒப்படைப்பது பூதாகரமானது. கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் இராணுவமயமாக்கலை கொண்டுவந்ததன் மூலமே யுத்தம் ஏற்பட்டது. ஆகவே தொழிலாளர்களை நசுக்க கம்பனிகளும் அரசாங்கமும் முற்படுகிறதா? என்ற சந்தேகமுள்ளது. ஆகவே அரசாங்கம் இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிடின் மக்கள் போராட்டம் இடம்பெறும்.

தற்போதைய நிலையில் ஆயிரம் ரூபாவை கொடுத்து ஏனைய நலன்புரி விடயங்களில் கம்பனிகள் கைவைத்தால் மலையகத்தில் பெரிய தொழிற்சங்கப் போராட்டம் இடம்பெறும். இதன்போது அனைத்து தொழிற்சங்கங்களும் இணைந்து செயற்பட வேண்டும் என்றார். (ந-இ)

# இலங்கைக்கு வந்தது 260,000 டோஸ் தடுப்பூசி

கொழும்பு, மார்ச் 8

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துமுகமாக 2லட்சத்து 60 ஆயிரம் டோஸ் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரா ஜெனகா தடுப்பூசிகள் நேற்று அதிகாலை இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இவை கோவெக்ஸ் திட்டத்தின் கீழ் உலக சுகாதார ஸ்தாபனத்தால் வழங்கப்பட்டவை. (ப)

**வேலையாட்கள் தேவை**

கொக்குவிலில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு உணவு பரிமாறுவதற்கும் சமையலுக்கு உதவி புரிவதற்கும் வேலையாட்கள் தேவை (ஆண்/பெண் இருபாலாரும்)

தொடர்புகளுக்கு 076 358 4258

**மணமகள் தேவை**

1988 இல் பிறந்த பூரநட்சத்திரம், 8இல் செவ்வாய், 103 கிரகபாவம் உடைய சொந்தத் தொழில் செய்யும் மணமகனுக்கு கிரகபாவம் 65இற்கு மேற்பட்ட மணமகள் தேவை.

தொடர்பு:
075 475 7056, 071 085 7114

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கோண்டாவில் கிழக்கு இராசபாதை வீதியில் Main Road உடன் 4½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 1 ½ பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.

**இராச வீதிச் சந்தியிலிருந்து 100 m தூரத்தில்**

**குரு:**
**0774683354, 0772880152**

**காணி விற்பனைக்கு**

யாழ் கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகாமையில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப் பரப்பு) பருத்தித்துறை வீதியில் இருந்து 40 மீற்றர் நடைதூரம் விலை நேரில் பேசி தீர்மானிக்கப்படும்

(தரகர் தேவையில்லை)

077 596 3845, 076 640 0974

### கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு

காங்கேசன்துறை தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தால் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

1990 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து 28 வருடங்களின் பின்னர் இப்பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில், காங்கேசன்துறை கிராம அபிவிருத்தி சங்கத்தினரால் மாலை நேர வகுப்புகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறித்த பகுதி மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக, கொழும்பு வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலய மாணவியால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ய-26)

**வேலைவாய்ப்பு**

உதயன் நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

- **சாரதி** (Driver)
- **பத்திரிகை மடிப்பாளர்** (Folders)
- **பத்திரிகை விநியோகஸ்தர்** (Delivery Staff)

மேற்படி வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் இன்று (08.03.2021) திங்கட்கிழமை பி.ப 3.00 - 6.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.

உதயன்

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**வேலைவாய்ப்பு!**

**GRAPHIC DESIGNER**
**(கிராபிக் டிசைனர்)**

**தகைமைகள்:**
- Photoshop, Illustrator, Corel Draw, Indesign போன்ற மென்பொருட்களில் திறன் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.
- முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

Indesign மென்பொருளில் (புத்தக வேலைகள்) அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**MARKETING EXECUTIVE**
**(விற்பனை உதவியாளர்)**

**தகைமைகள்:**
- A/L சித்தியெற்றிருத்தல் வேண்டும்.
- முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**WE NEED WEBSITE & FACEBOOK MAINTAINER**

**புதன்கிழமை (10.03.2021) காலை 9.30 மணிமுதல் மதியம் 12.30 மணிவரை நேர்முக தேர்வு நடைபெறும்.**

நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:

ANDRA ADVERTISING (PVT) LTD.
379, Kasthuriyar Road, Jaffna.
0776622981 | 0777481696

## மரண அறிவித்தல்



### திருமதி கந்தசாமி இராசலட்சுமி (லட்சுமி)

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி இராசலட்சுமி (லட்சுமி) நேற்று (07.03.2021) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு புதல்வியும், காலஞ்சென்ற கிருஸ்ணப்பிள்ளை கந்தசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கிருஸ்ணப்பிள்ளை சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், தனிநாயகம் (இத்தாலி), காலஞ்சென்ற மதுரநாயகம் (சுவிஸ்), தெய்வநாயகம் (லண்டன்), சுமித்திரா, காலஞ்சென்ற லோகநாயகம் ஆகியோரின் அன்புத் தாயாரும், தயாநிதி, திருமகள், கோமளேஸ்வரி, சத்தியமூர்த்தி, கருணாவதி ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்வக்குமரன், பிரகாஸ், மயூரன், மகுணன், மதுலன், மனோஜன், காலஞ்சென்ற சிவரஞ்சன், அகிலன்-சிவரஞ்சினி, தயாபரன்- சிவதர்சினி, டினேஸ்-விஜிதா, சண்முகப்பிரியன், கஜந்தா, சுவேதன்- தாரணி, ருக்ஷாயினி, சலாஜினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அபிஷா, அனுசியா, அனனியா, அஜய், அஸ்விகா, கவிஸ், துவிஸ் ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்ற செல்லம்மா, நாகம்மா, அன்னம்மா, பாலசுந்தரம், காலஞ்சென்ற ராஜசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நாகராஜா, பொன்னம்பலம், சபாரட்ணம் மற்றும் பற்குணம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2021) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 1.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கைதடி வடக்கு தச்சன்புட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**கைதடி வடக்கு, கைதடி. குடும்பத்தினர்.**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.